வாராந்த சஞ்சிகை

பெப்ரவரி 10 - 16, 2016


# சுடர் ஒளி


பக்கம் 24

விலை 30/-




# யார் பொறுப்பு?

# கிடைக்குமா நீதி...?






# உலகில் வயது கூடிய பெண்ணாக கனடியர்

தங்கள் பிள்ளைகளிற்கு முன்னர் தாங்கள் இறப்பதைப் பெற்றோர்கள் விரும்புவது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆனால் குறிப்பிட்ட காலத்தையும் மிஞ்சி வாழ்ந்து கொண்டிருக்கும் சிசிலியா லொறென்ட் இது கடினமானதென நிரூபித்துள்ளார்.

லோறன்ட் கடந்த மாதம் தனது 120 ஆவது வயதை அடைந்துள்ளார். இவர்தான் உலகில் மிகவும் பழமையானவர் எனக் கருதப்படுகின்றது.

லோறன்டின் 12பிள்ளைகளில் மூவர் மட்டுமே உயிருடன் இருப்பதாக லோறன்டின் 28 வயதுடைய கொள்ளுப்பேரன் றொனால்ட் செறி தெரிவித்துள்ளார். மூத்த பிள்ளைக்கு 80 வயது.

றோறன்ட் மிகுந்த கடவுள் நம்பிக்கை கொண்டவர் எனவும் கூறப்படுகின்றது.

2010இல் ஹெயிட்டியில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியின் போது நாட்டை விட்டு வெளியேறி கியுபெக் வந்தவர். மொன்றியல் பகுதியில் லாவல் என்ற இடத்தில் தனது குடும்பத்தினருடன் வசிக்கின்றார்.

இவரது பெயர் கின்னஸ் உலக சாதனை கள் புத்தகத்தில் இடம்பெறும் எனக் கருதப்படுகின்றது.

ஜனவரி 31, 1896 இல் பிறந்தவர் என குடும்பத்தினர் உறுதியாகத் தெரிவித்துள்ள னர். இது சட்டபூர்வமாக்கப்பட்டால் உல கின் மூப்புற்ற பெண் என இவர் பெயரிடப் படுவார்.

இவர் பலரின் கவனத்தையும் ஈர்ந்துள்ளார். இன்னமும் தெளிவான நினைவுடன் இருக்கின்றார்.

அண்மையில் ஹெயிட்டியின் வெளிவிவகார அமைச்சர் லோறன்டை சந்திக்க கியுபெக்கிற்கு விஜயம் செய்துள்ளார்.

அனைத்து இயற்கை உணவு மற்றும் 'கார்ட்டுன்'கள் தனது கொள்ளுப் பாட்டியை ஆரோக்கியமாக வைத்திருக்கின்றதென 'செரி' தெரிவித்துள்ளார்.

சாப்பாட்டை நேசிப்பவர் ஆனால் அனைத்தும் இயற்கை உணவுகள் மட்டும் எனவும் கூறினார்.

சிறுவர்கள் அவரிடம் வந்தால் அவர் கேட்கும் முதல் கேள்வி உங்கள் வீட்டு வேலைகளைச் செய்து விட்டீர்களா என்பதாகும். நீங்கள் என்னைப் பார்க்க வருவது விரும்பத்தக்கது ஆனால் உங்கள் வீட்டு வேலைகளை முடித்து விட்டீர்களா எனக் கேட்பார்.



உணவுப்பிரியர்களைப் பெரிதும் கவரும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக தண்ணீருக்கு அடியில் பிரம்மாண்ட ரெஸ்ரோரண்ட் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அகமதாபாத்தில் பாரத் பட்



# இந்தியாவில் முதல்முறையாக நீருக்கடியில் ரெஸ்ரோரண்ட்

என்ற தொழிலதிபருக்கு சொந்தமான The Real Poseidon என்ற சைவ உணவகம்தான் அது. தரைமட்டத்தில் இருந்து 20 அடி ஆழத்தில் 1.60 லட்சம் லீற்றர் தண்ணீரால் நிரம்பிய மீன் கண்காட்சியகத்திற்கு உள்ளே இந்த ரெஸ்ரோரண்ட் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மீன் காட்சியகத்தில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீன் வகைகள் உள்ளன. 32 இருக்கைகளைக் கொண்ட இந்த ரெஸ்ரோரண்ட்டில் தாய்லாந்து, மெக்சிகன் மற்றும் இந்திய உணவுகள் பரிமாறப்படுகின்றன. சைவ உணவுகள் மட்டுமே இந்த ரெஸ்ரோரண்டில் வழங்கப்படுகிறது. இதுபோன்ற நீருக்கடியில் ஒரு ரெஸ்ரோரண்ட் இந்தியாவில் இருப்பது இதுவே முதல்முறை என கருதப்படுகிறது.





# விமானத்தில் தனியாக பயணம் செய்த பெண்:

சீனாவில் குரங்குப் புத்தாண்டை கொண்டாடுவதற்கு சீனர்கள் தங்களது சொந்த ஊருக்கு குடும்பத்துடன் பயணம் செல்வார்கள்.

ஆனால் இந்த ஆண்டு அங்கு ஏற்பட்ட பனிப்பொழிவு காரணமாக குயான்ஷு, வூகன் உள்ளிட்ட மாகாணங்கள் கடும் பாதிப்புக்குள்ளாகின. எனவே இப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

பஸ், ரெயில் மற்றும் விமானங்கள் பல மணி நேரம் தாமதமாக புறப்பட்டன. இதனால் அப்பகுதியில் உள்ள ரெயில் மற்றும் விமான நிலையங்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் சிக்கி தவித்தனர்.

அது போன்று வோன் ஷுவில் ஷாங் என்ற பெண்ணும் சிக்கி கொண்டார். இவர் ஒரு மோட்டார் கம்பெனி ஊழியர் ஆவார். இந்த நிலையில் திடீரென அங்கு ஒரு விமானம் புறப்படத் தயார் நிலையில் இருப்பதை அறிந்தார். உடனே அங்கு விரைந்து சென்று 1200 யூயான் (ரூ. 2800) கொடுத்து 'ரிக்கெற்' எடுத்து விமானத்தில் ஏறினார்.

உள்ளே சென்று பார்த்த போது விமானத்தின் இருக்கைகள் அனைத்தும் காலியாக இருந்தது. இவர் மட்டுமே தனியாக இருந்தார். ஏனெனில் பனிப்பொழிவு காரணமாக அங்கு வந்து யாராலும் விமானத்தை பிடிக்க முடியவில்லை.

எனவே, ஷாங் மட்டும் தனியாக பயணம் செய்தார். அவருக்கு விமான பணிப்பெண்கள் மகிழ்ச்சியுடன் சேவை செய்தனர். விமானிகள் வந்து அவருடன் நேரடியாக பேசி கை குலுக்கினர். இதனால் மகிழ்ச்சி அடைந்த அவர் துள்ளிக்குதித்து நடனம் ஆடினார்.

2 மணி நேரம் விமானத்தில் தான் மட்டும் தனியாக பயணம் செய்தார். தனது இந்த அனுபவத்தை போட்டோவுடன் சமூக வலைதளத்தில் வெளியிட்டார். மகிழ்ச்சியடைந்ததாகவும் தான் ஒரு "ராக் ஸ்டார்" அனுபவத்தை பெற்றதாகவும், இது போன்ற தருணத்தை தான் எப்போதும் அனுபவித்தது இல்லை என்றும் கூறியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊர்மிளா

**இ.போ.சவுக்கும் தனியார் பஸ்ஸுக்கும் இடையேயான போட்டியால் அநியாயமாக பல உயிர்கள் பறிக்கப்படுகின்றன. கடந்த வாரம் பலாலி வீதியில் நடைபெற்ற கோர விபத்து இதற்கு சாட்சி. வாகனத்தை முந்திச்செல்வது. நடு வீதியில் பயணிகளை இறக்குவது ஏற்றுவது என்பன பயணிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றன. பின்னால் வரும் வாகனத்தை முந்தவிடாது நடு வீதியில் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகள் பின்னர் அதுபற்றி பெருமையாகப் பேசுவார்கள்.**

# உயிருடன் விளையாடும் விபத்துகள்

வீட்டைவிட்டு வெளியே சென்றால் உயிருடன் திரும்பி வருவோமா என்ற சந்தேகம் உள்ளது. எப்ப டித்தான் அவதானமாக நடமாடினாலும் விபத்து என்ற கோர அசுரன் உயி ரைக் காவு கொள்கின்றது. சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் எப்போதாவது ஒரு நாள் விபத்து நடை பெற்றது. இன்று விபத் துக்கள் இல்லாத நாளே கிடையாது.

வாகனங்கள் அதிகரித்தது விபத்துக்கு ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. வாகனப் பெருக்கம் ஒரு காரணமாக இருந்தாலும் வாகனங்களைச் செலுத்துபவர்களின் அனுபவ மின்மையும் பிரதான காரணம். கொஞ்சம் பின்னோக்கிய காலத்தில் உயர் தரம் படிக்கும் மாணவனுக்குத்தான் சைக்கிள் வாங்கிக் கொடுப்பார்கள். இன்று நிலைமை மாறிவிட்டது. மோட்டார் சைக்கிள் ஒரு கௌரவப் பொருளாகி விட்டது. யாழ்ப்பாணத்திலே முன்னர் ஒரு வீட்டில் இரண்டு மூன்று சைக்கிள்கள் இருந்தன. இன்று அந்த இடத்தை மோட்டார் சைக்கிள்கள் பிடித்துவிட்டன. உயிரை காவு கொள்வதில் மோட்டர் சைக்கிள் விபத்து முன்னிலையில் உள்ளது.



திருமணம்,பிறந்த நாள்,விருந்துபசாரம் போன்ற விசேஷமான நாள்களில் அவசர தேவைக்காக மோட்டர் சைக்கிளில் அதி வேகமாகச் செல்லும் இளைஞர்கள் விபத்துக் குள்ளாகின்றனர். கடந்த வாரம் யாழ்ப்பணத்தில் உள்ள பிரபல பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் வீதியை ஆக்கிர மித்து சாகசம் காட்டியதில் பாரிய விபத்து நடைபெற்றது. பல்கலைக் கழக மாணவன் மோட்டர் சைக்கிளில் விபத்தில் சிக்கியதால் பரீட்சை எழுத முடியாது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். இது போன்ற விபத்துக்களை அவர்கள் தவிர்த்திருக்கலாம். விபத்திலிருந்து நாமும் மற்றவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருந்தால் இது போன்ற விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

வீதி ஒழுங்கு சரியான முறையில் கடைப்பிடிக்கப்படாமை, அதிக வேகம், கார்பெட் வீதிகள் என்பனவும் விபத்துக்கள் அதிகரிப்பதற் கான காரணிகள். மஞ்சள் கோட்டிலே வேகத்தைக் குறைக்க் வேண்டும் என்ற எண்ணம் அதிகமான சாரதிகளுக்கு இல்லை. வீதியைக் கடக்க நிற்பவர்களை ஏளனமாகப் பார்த்துக் கொண்டு செல்வார்கள். தமக்காக மட்டும் அமைக்கப்பட்ட பிரதான வீதி என்ற நினைப்பு சில சாரதிகளிடம் உள் ளது. முன்னுக்குச் செல்லும் வாக னத்தை முந்த வேண்டும் என்ற அவா சில சமயம் விபத்தை உண்டாக்கி விடுகிறது.




இ.போ.சவுக்கும் தனியார் பஸ்ஸுக்கும் இடையேயான போட்டியால் அநியாயமாக பல உயிர்கள் பறிக்கப் படுகின்றன. கடந்த வாரம் பலாலி வீதியில் நடைபெற்ற கோர விபத்து இதற்கு சாட்சி. வாகனத்தை முந்திச் செல்வது. நடு வீதியில் பயணிகளை இறக்குவது ஏற்றுவது என்பன பயணிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றன. பின்னால் வரும் வாகனத்தை முந்தவிடாது நடு வீதியில் உயிருக்கு ஆபத்து விளை விக்கும் வகை யில் வாகனத் தைச் செலுத்தும் சாரதிகள் பின் னர் அதுபற்றி பெருமையாகப் பேசுவார்கள். இ.போ.சவுக்கும் தனியார் பஸ்ஸுக்கும் இடையேயான போட்டி, சில சமயம் கைகலப் பாகவும் மாறி விடு வதுண்டு.

மது அருந்தி விட்டு வாகனத் தைச் செலுத்துவது பாரிய விளைவைத் தோற்று விக்கும் என்பதை அறிந்து கொண்டும் மது அருந்திய பின்னரும் வாகனத்தைச் செலுத்துகிறார்கள். விசேஷமான நாள்களில் மது அருந்துவது கட்டாயம் என்ற மனோநிலை சிலரிடம் ஏற்பட்டுள்ளது. மது அருந்திய பின் வாகனம் செலுத்தக் கூடாது, ஹெல்மட் இல்லாமல் மோட்டர் சைக்கிள் செலுத்தக் கூடாது என்பனவற்றைத் தெரிந்து கொண்டும் அப்படியான தவறை மீண்டும் மீண்டும் செய்கிறார்கள்.

ரயிலை முந்திச்செல்ல முயலும் புத்திசாலிகளால் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறுகின்றன. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் விபத்து புகையிரதக் கடவைக்கு பாதுகாப்பு போட வேண்டும் எனக்கோரி மக்கள் போராட்டம் என்ற செய்தி பத்திரிகைகளில் முதலிடம் பிடிக்கின்றன. அதேவேளை பாதுகாப்பான கடவையில் புகையிரதம் வருமுன் செல்ல முயன்று நடைபெறும் விபத்துக்களும் இடம் பிடிக்கின்றன. புகையிரதக் கடவையின் இரண்டு பக்கங்களிலும் துலாவை இறக்கிவிட்டு பீப் பீப் என்ற எச்சரிக்கை ஒலி கேட்கும் போது சில அவசரக் குடுக்கைகள் வீதியைக் கடக்கிறார்கள். விதி வலியதாகும் போது அவர்களின் வாழ்வு அங்கேயே முடிந்து விடுகிறது.

திருமணத்துக்காக வெளி நாட்டில் இருந்து வந்த மணமகன் பலி என்ற செய்தி பலரையும் கலங்க வைக்கும் செய்தி என்பதில் சந்தேகமில்லை. அப்படியான சந்தர்ப்பங்களில் வாகனத்தைச் செலுத்துபவர்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். இரவு பகல் நித்திரை இல்லாது வாகனம் செலுத்துவதும் விபத்துக்குக் காரணமாகிறது. சில நிறுவனங்கள் சாரதிகளின் எண்ணிக்கையைக் குறைத்து செலவை மிச்சம் பிடிக்கிறார்கள். அப்போது மேலதிக வேலையில் கிடைக்கும் அதிக சம்பளத்துக்கு ஆசைப்படுபவர்களால் விபத்தைத் தவிர்க்க முடிவதில்லை.

விபத்து என்பது நம்மையும் மீறி நடைபெறும் ஒரு சம்பவம். ஆனால், இன்றைய அதிகமான விபத்துக்கள் அலட்சியத்தால் நடைபெறுகின்றன, வாகனத்தைச் செலுத்தும்போது எனது குடும்பத்தை நான் காப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டால், விபத்தைத் தவிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாதா தாவூத் இப்ராஹிம்

சண். சரவணக்குமார்

அதன் பிறகு படா ராஜனை கொலை செய்த அப்துலை பழிவாங்க துடித்தான் சோட்டா ராஜன். சோட்டா ராஜன் ஆட்கள் தேடுவது தெரிந்த அப்துல் பொலிஸில் சரணடைவதற்காக, நீதிமன்றம் சென்று வரும் வழியில் காரில் வைத்து சோட்டா ராஜன் மற்றும் அவனது ஆட்களால் சுடப்பட்டான். ஆனால் அதிர்ஷ்டவசமாக ஒரு சில குண்டடிகளோடு உயிர் தப்பித்தான் அப்துல். அதன் பிறகு இரு வாரங்கள் கழித்து குண்டடிப்பட்ட காயத்திற்கு மருத்துவம் பார்க்க வந்த அப்துலை, நோயாளிகள் போல சென்று சோட்டா ராஜனின் ஆள் மருத்துவமனையில் வைத்துச் சுட்டான். அப்பொழுதும் அவன் குண்டடிப்பட்டு தப்பித்து விட்டான். இந்த சம்பவங்கள் மூலம் தாவூத்தின் மனதில் இடம் பிடித்தான் சோட்டா ராஜன். அதன் பிறகு சோட்டாராஜனை தன்னுடைய குழுவில் சேர்த்துக்கொண்டான் தாவூத். மூன்று வருடங்கள் கழித்து தனது ஆட்களுடன் மைதானம் ஒன்றில் கிரிக்கெட் ஆடிக்கொண்டு இருந்த அப் துலை, பல்வேறு நபர்கள் முன்னிலை யில், கிரிக்கெட் வீரர்கள் போல வந்து சத்தமில்லாமல் கொடூரமாக வெட்டிக் கொலை செய்தனர் சோட்டா ராஜனும் அவனது ஆட்களும். அதன் பிறகு இந்த சம்பவம் பரபரப்பாக பேசப்பட்டது.

சோட்டா ராஜன் எதிலும் மிக உஷாரான பேர்வழி. தாவூத் ஒரு விஷயத்தை நினைத்து பார்த்துக் கொண்டு இருக்கும் பொழுதே அதை செய்து முடித்து விடுவான். அதனால் தாவூத் குரூப்பில் அவனை எல்லோரும் 'ஸ்பீட்' என்றும், நாணா என்றும் அழைப்பதுண்டு.

மும்பை மாஃபியா வட்டாரங்களில் பெரும்பாலும் டான்களாக இருந்தது பதான்களும், முஸ்லிம்களும், சில இந்துக்களும்தான். அதனால் அவர்களுக்குள் இந்து, முஸ்லிம் சண்டைகள் உண்டு. தாவூத்தின் வளர்ச்சி சிவசேனா அமைப்பை சேர்ந்த பால்தாக்கரேவிற்கு பிடிக்கவில்லை. தாவூத்தைத் தாண்டி அவர்களால் மும்பையில் எதுவும் செய்ய முடியாத நிலை இருந்து வந்தது. அதற்கு முழுக்காரணம் சோட்டா ராஜன்தான். பால்தாக்கரேவிற்கு பல்வேறு வழிகளில் கை கொடுத்தான் சோட்டா ராஜன். அதனால் சோட்டா ராஜனை முழுவதுமாக நம்பினான் தாவூத். அதன் பிறகு பல்வேறு முக்கிய முடிவுகளை எடுப்பதை சோட்டா ராஜன் கையில் கொடுத்தான்.

துருக்கியை சேர்ந்த ஆயுதங்கள் விற்கும் பிரபல வியாபாரி ஒருவனிடம் பல்வேறு ஆயுதங்களை வாங்க சோட்டா ராஜன் திட்டமிட்டான். ரஷ்யாவில் இருந்து ஆயுதங்கள் வாங்கி பல்வேறு நாடுகளில் விற்று வந்தான் அந்த துருக்கிகாரன். மும்பை தாதாக்களி டம் இருந்த துப் பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் எல்லாம் பழசாக இருந்தது. 'மும்பையில் நமது இருப்பை நிலை நிறுத்த வேண்டும் என்றால் அதிநவீன ஆயுதங்கள் வேண்டும்' என்று தாவூத் திடம் சொல்லி, பயங்கர மான ஆயுதங்களை வாங்கினான். இதனால் மும்பை வட்டாரமே கதிகலங்கி போனது. பல்வேறு தாதாக்கள் தாவூத்திடம் மோத பயந்தார்கள். எல்லாம் சோட்டா ராஜனின் மூளை என்று இருந்தனர்.

இந்தநிலையில் சோட்டா ராஜனின் வளர்ச்சி, தாவூத்திடம் இருந்த மற்ற தளபதிகளுக்கு பிடிக்க வில்லை. அதனால் சோட்டா ராஜனின் சோலியை முடிக்கும் வேலைகளில் இறங்கினார்கள். விளைவு தாவூத் - சோட்டா ராஜன் இடையே பிளவு உண்டானது.

இப்பொழுது சோட்டா ராஜனை பொலிஸ் கையில் எடுத்துள்ளது.

தாவூத் இப்ராஹிமினால் என் உயிருக்கு ஆபத்து என்று அலறத் தொடங்கி இருக்கிறார் சோட்டா ராஜன். பாலித்தீவில் ஆஸ்திரேலியா காவல் நிலையத்தில் கதறியது முதன்முறையல்ல. சோட்டா ராஜன் தாவூத்தை விட்டு பிரிந்து சென்ற பொழுதே, தப்பிக்க இந்திய தூதரக அதிகாரிகளை தொடர்பு கொண்டு, மிகவும் பதட்டமான சூழலில், தன்னை காப்பாற்றும்படி கதறி அழுத கதையின் பின்புலம் மிகவும் சுவாரஸ்யமானது.

சோட்டா ராஜனுக்கு சொர்க்கமாக இருந்த துபாய் அன்று நரகமாக மாறிப்போனது. துபாயில் அந்த ஒரு இரவை மட்டும் கழித்து இருந்தால், யாருக்கும் தெரியாமல் கடலில் சுறாவுக்கு இரையாகிவிடுவோம் என்று உயிர் பிழைத்து ஓடிப்போய் 'சரண்டர்' ஆனான். இந்திய ஹை கமிஷன் அதிகாரிகள் தாவூத்தை வீழ்த்த் சோட்டா ராஜனை கையில் எடுக்க ஆயத்தமானார்கள். சோட்டா ராஜனின் கவனம் முழுவதும் தாவூத்திடம் இருந்து எப்படியாவது தப்பித்து போக வேண்டும் என்ற ஒரே எண்ணமாக இருந்தது. ஒரே நாளில் தாவூத்தின் முக்கியமான டைரியை துபாயில் இருந்த இந்திய உளவுத்துறை அதிகாரியிடம் கொடுத்தான்.



அந்த டைரியில் தாவூத்தின் நிழல் உலக வியாபார புள்ளிகளின் தொடர்புகள் எண்கள் உள்பட பல்வேறு முக்கியமான விபரங்கள் அடங்கி இருந்தன. அதனைப் பார்த்த உளவுத்துறை அதிகாரிகள் மிரண்டு போய் விட்டனர். யாரெல்லாம் பல்வேறு நாடுகளின் மிகப்பெரிய அதிகார மையத்தின் முக்கிய புள்ளிகள் என்று நினைத்தார்களோ அவர்கள் எல்லாம் தாவூத்திற்கு நெருக்கமாக இருப்பது தெரிய வந்தது.

அதோடு டுபாய் நாட்டின் ராஜ குடும்பத்தின் மன்னர், இளவரசர் உள்பட அனைவரும் தாவூத்திற்கு மிகவும் நெருக்கமாக இருப்பதை அந்த டைரி காட்டிக்கொடுத்தது.

அந்த டைரியை மிகவும் ஆர்வமாகவும், அதிர்ச்சியாகவும் அதே நேரத்தில் மிகவும் சுவாரஸ்யமாகவும் படித்துக்கொண்டு முக்கிய குறிப்புகளை எடுத்துக்கொண்டு இருக்கும்பொழுதே சோட்டா ராஜன் அலற ஆரம்பித்தான். நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் என் உயிருக்கு மட்டும்மல்ல; உங்கள் உயிருக்கும் ஆபத்து. உங்கள் உயிர் துப்பாக்கி குண்டுகளால் பறிக்கப்படும் என்று அலறினான். அடுத்த ஒரு மணி நேரத்தில் சோட்டா ராஜனுக்கு சென்னையில் உள்ள ஒரு முகவரியில் இருந்து 'பாஸ்போர்ட்', 'விசா ரெடி' செய்து காத்மாண்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கிருந்து மலேசியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டான்.

மலேசியாவிற்கு ஒரே இரவில் சோட்டா ராஜன் தப்பித்துபோன கதை இரண்டு நாள் கழித்துதான் தாவூத்திற்கு தெரிய வந்தது. சோட்டா ராஜன் தாவூத்தை தொடர்பு கொள்ளவில்லை என்பதால், யார் கையிலாவது சிக்கிக்கொண்டானா என்று தீவிரமாக தேடியபொழுதுதான், தாவூத்தின் 'சோர்ஸ்' ஒருவன், சோட்டா ராஜன் அவசர அவசரமாக டுபாயில் இருந்து வெளியேறிய கதையை சொன்னான். தாவூத்தின் உச்சக்கட்ட கோபத்திற்கு ஆளானான் சோட்டா ராஜன். உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் சோட்டா ராஜனின் தலை தனக்கு வேண்டும் என்று தனது சகாக்களுக்கு கட்டளை போட்டான்.

மலேசியா, சிங்கப்பூர் என்று தாவூத்தின் ஆட்கள் கொலைவெறியோடு தேடினார்கள். இந்த விஷயத்தை மோப்பம் பிடித்த இண்டர்போல் அமைப்பு, சோட்டா ராஜனை உடனடியாக தாய்லாந்திற்கு அனுப்பினார்கள். தாய்லாந்து போன சோட்டா ராஜனை மூன்று மாதம் கழித்து தேடிக்கண்டுபிடித் தனர். அங்கிருந்த சோட்டா ராஜனைப் போட்டுத்தள்ள ஆயத்தமானபொழுது, அவர்களிடமிருந்து தப்பித்து பாங்கொங் கடலுக்குள் ஓடி ஒளிய ஆரம்பித்தான் சோட்டா ராஜன்.

பாங்கொங் கடலுக்குள், சொகுசு கப்பலில் மூன்று ஆண்டுகள் தலை மறைவு வாழ்க்கை வாழ்ந்தான். அவன் குடியிருந்த கப்பலை நோக்கி வந்த பல்வேறு கப்பல்களை கண்டாலே தாவூத் தன்னை கொலை செய்ய வருவதாக பயத்தில் நடுங்கி அலற ஆரம்பித்தான். அதன் பிறகு பாங்கோங் நகரில் வைத்து சோட்டா ராஜன் மீது கொலை வெறி

**(தோட்டக்கள் பாயும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்வாழும் மனித பார்பி பொம்மை

உயிர்வாழும் மனித பார்பி பொம்மை என வர்ணிக்கப்படுபவர் யுக்ரைனிய யுவதியான வலேரியா லக்கியனோவா. சிறுமிகளைக் கவரும் பார்பி பொம்மையின் தோற்றத்தில் இருப்பதால் பிரபல்யமடைந்த லக்கியனனோவா, மற்றொரு யுவதியுடன் மிக நெருக்கமாகத் தோன்றும் வகையில் புகைப்படங்களுக்கு போஸ் கொடுத்துள்ளார்.

30 வயதான வலேரியா, ஸ்வெட்லானா பொன்டேரென்கோ எனும் தனது நண்பியுடன் இப் படங்களுக்கு போஸ் கொடுத்துள்ளார். சீனாவின் குவாங்டோங் மாகாணத்திலுள்ள ஷென்ஸென் நகரில் இப் புகைப்படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது. ஆனால், இப் புகைப்படங்கள் இரு நெருக்கமான நண்பிகளுக்கு இடையிலான உணர்வையே வெளிப்படுத்துகின்றன எனவும் பாலியல் நோக்கம் கொண்டவையல்ல எனவும் 30 வயதான வலேரியா கூறியுள்ளார்.



# ராட்சத நண்டுகள்!



இந்தியப் பெருங்கடலில் ஆஸ்திரேலியாவுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்திருக்கிறது கிறிஸ்துமஸ் தீவு. இந்தத் தீவில் பிரத்யேகமான உயிரினங்கள் வசிக்கின்றன. தீவில் உள்ள காடுகளில் உலகிலேயே மிகப் பெரிய நண்டுகள் வாழ்கின்றன. 4 கிலோ எடையும் 3 அடி நீளமும் கொண்ட இந்த நண்டுகள், ஒரு தேங்காயைத் தங்கள் கால்களால் உடைத்துவிடும் அளவுக்கு வல்லமை பெற்றவை.


இவை தண்ணீரில் வசிப்பதில்லை. நிலத்தில் உள்ள வளைகளில் வசிக்கின்றன. மரங்களில் ஏறுகின்றன. 60 ஆண்டுகள் வாழ்கின்றன. லட்சக்கணக்கில் இருந்து வந்த நண்டுகளின் எண்ணிக்கை, அவற்றின் மாமிசத்துக்காக வேட்டையாடப்பட்டு, வெகுவாகக் குறைந்து வருகின்றன. 'மார்க் பியரோட்' என்ற புகைப்படக்காரர் கிறிஸ்துமஸ் தீவுக்குச் சென்று, துணிச்சலுடன் ராட்சத நண்டுகளைப் படங்கள் எடுத்திருக்கிறார்.

# சிறுவனின் அதிசய காந்த சக்தி

மின்சாரம் தாக்கி மேக்னடிக் மேனாக மாறியுள்ளான் ரஷ்யா வைச் சேர்ந்த பன்னிரெண்டு வயது சிறுவன் ஒருவன். இச்சம்பவம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. ரஷ்யாவை சேர்ந்த நிக்கோலை என்ற சிறுவன் வீதியில் உள்ள விளக்குக் கம்பத்தில் சாய்ந்தபோது, அவனை மின்சாரம் தாக்கி மயக்கமடைந்துள்ளான். மயக்கமடைந்த அச்சிறுவனை பார்த்த அக்கம் பக்கத்தினர், அவனது வீட்டில் அவனை பத்திரமாக சேர்த்துள்ளனர்.

மயக்கத்திலிருந்து விழித்து காலையில் எழுந்த சிறுவனுக்கு அதிர்ச்சி கலந்த ஆச்சரியம். அவனது படுக்கையில் இருந்த சில நாணயங்கள் அவன் மீது ஒட்டி கொண்டுள்ளது. மேலும் சாப்பிடும் போது தவறவிட்ட ஸ்பூன், அது அவனது நெஞ்சில் ஒட்டிக் கொண்டுள்ளது.

இதனால் பள்ளிக்கூடத்தில் பிரபலமடைந்த நிக்கோலை, தற்போது மாணவர்கள் மத்தியில் சாகசங்கள் செய்து அசத்தி வருகிறான். அக்கம் பக்கத்தினரும் இவனை ஆச்சரியத்துடன் வந்து பார்த்துவிட்டு செல்கின்றனர்.





# ஒரு பெங்குயினின் நண்பன்

ஜோவோ பெரைரா டி சோசா ஓய்வு பெற்ற பிறகு, தென்அமெரிக்காவின் படகோனியன் பகுதியில் வசித்து வருகிறார். இது பெங்குவின்கள் வசிக்கும் பகுதி. ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட காலத்தில் இடப்பெயர்ச்சி செய்வதற்காக பெங்குவின்கள் இங்கே வருகின்றன. 5 ஆண்டுகளுக்கு முன்பு அப்படி வந்த பெங்குவின்களில் ஒன்று, டி சோஸா வீட்டுக்கு வந்து சேர்ந்தது.

பெங்குவினை ஆவலோடு வரவேற்று, அன்பாக நடத்தினார். உணவைக் கொடுத்து, ஓய்வெடுக்க வைத்தார் டி சோஸா. அந்த ஆண்டு இடத்தை விட்டுக் கிளம்பும் வரை அடிக்கடி டி சோஸா வீட்டுக்கு வருவதும் போவதுமாக இருந்தது பெங்குவின். ஜின்லிங் என்று பெயரும் சூட்டி, அழைத்து வந்தார் டி சோஸா. பல நாள்கள் பெங்குவின் வீட்டில் தங்கியிருக்கும்போது, கடலுக்குச் சென்று விட்டுவிட்டு வருவார். சிறிது நேரத்தில் டி சோஸா வீட்டுக்குத் திரும்பிவிடும். ஒருமுறை படகில் வைத்து, தொலை தூரத்தில் விட்டுவிட்டு வந்தார்.

அந்த முறை பெங்குவின் திரும்பி வரவில்லை. ஆனால் அடுத்த ஆண்டு இடப்பெயர்ச்சிக் காலத்தில் படகோனியன் பகுதிக்கு வந்தபோது, மீண்டும் சரியாக டி சோஸா வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டது. அந்தத் தடவை 8 மாதங்கள் வரை டி சோஸாவுடனே தங்கியிருந்தது. டி சோஸா பூனை, நாய், கோழி போன்ற உயிரினங்களுடன் பழகுவது பெங்குவினுக்குப் பிடிக்கவே பிடிக்காது. யாரையும் டி சோஸா அருகில் நெருங்கவே விடாது. ஐந்தாவது ஆண்டாக பெங்குவின் டி சோஸா வீட்டுக்கு வந்திருக்கிறது.

இருவரின் நட்பைக் கண்டு ஆச்சரியப்படாதவர்களே கிடையாது. இதுவரை ஜின்லிங் மாதிரி ஒரு பெங்குவினை நாங்கள் பார்த்ததே இல்லை. அன்பு, பொறாமை என்று மனிதர்களைப் போலவே பல உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது ஆச்சரியமாக இருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் மிகச் சரியாக டி சோஸா வீட்டுக்கு வருவது அதை விட ஆச்சரியம். ஜின்லிங் மூலம் இந்தக் கிராமத்துக்கு நிறையப் பெருமையும் கிடைத்திருக்கிறது" என்கிறார் ஒரு மீனவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 492 7419

# மக்களுக்கான போக்குவரத்து இலகுவாக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாண மாவட்டத்தில், போக்குவரத்து விதிகளை மீறும் பஸ் சாரதிகளால், அடிக்கடி பெரிய விபுத்துக்கள் ஏற்படுவது நாளாந்த நிகழ்வுகள் ஆகிவிட்டன. ஆகையால் இனிமேல்,போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்ட நடவடிக்கைகளோடு, அவர்களது சாரதி அனுமதிப் பத்திரங்களும் ரத்துச் செய்யப்படும்.

மேற்போந்த அறிவித்தல்களை விடுத்திருக்கிறார் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன்.

தண்டணைகளுக்கு மறுபுறத்தில், வீதிகளில் திடீர்ச் சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் காட்ட மாகத் தகவல் தெரிவித்துள்ளார்.

வீதிகளில் திடீர் கண்காணிப்புக்களை தொடர்ந்து நடத்துவதோடு, மோட்டார் திணைக்களத்தினரும் அந்தப் பணிக்கு உதவுவார்கள்.

போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடும் வாகனங் களின் சாரதிகள், போட்டிபோட்டு ஓடுவதால் அடிக்கடி பல உயிர் இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

பொதுமக்களில் மிகப்பெரும்பாலானோர், தமது அன்றாடக் கருமங்களை மேற்கொள்வதற்கு முழுக்க முழுக்க பொதுவாகனங்களையே நம்பி உள்ளனர். அதன் பொருட்டு அவர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் அள விட்டுக்கொள்ள இயலாதவை.

மிகக்குறிப்பாக, தனியார் பேருந்துகளும், அரச பேருந்துகளும், தமக்குள் போட்டி போட்டு ஓடுவதால் பயணங்கள் ஆபத்து நிறைந்தவையாகவே, விபரீதம் மிக்கவையாகவே உருவெடுக்கின்றன. இன்னொரு வகையில் கூறுவதானால், தனியார் பஸ்களில் ஏறுவோர், பயணிப்போர் உயிரைக் கையில் பிடித்துச்செல்லும் தன்மையே விரிகிறது!

கடந்த வாரத்தில் (03.02.2016 இல்) திருநெல்வேலிப் ப்குதியில் நடைபெற்ற விபத்தினை, ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.

மேலும், வாகனத்தை லீசிங் வசதியில் கொள்முதல் செய்துவிட்டு, அதற்கான பணத்தைச் செலுத்துவதற்குப் பாடாய் பாடுபடும் தனியார் வாகனச் சொந்தக்காரர் ஒருபுறம் -

தமக்குச் சம்பளம் கொடுக்கும் அரச பேருந்துகள் நட்டமுறக்கூடாது என்று உழைக்கும் அரச பஸ் பணியாளர் கள் மறுபுறமும் -

போக்குவரத்துக்கு பஸ்களையும், பொது வாகனங் களையும் நம்பி இருக்கும் பயணிகள் இன்னொரு புறமும் என்று-

முத்தரப்புகளும் தத்தமக்கு உள்ள சவால்களை எதிர் கொள்வதைக் கரி பூசி அழித்துவிட இயலாது.

நெருக்கடி மிகுந்த போர்க் காலத்தில் தமது சேவையை சோர்ந்து போகாமல் செய்தவர்கள் தனியார் துறை சார்ந்த வர்களே.

மொத்தத்தில், முடிவில்லாத சவால்களை முத்தரப்பின ரும் எதிர்கொண்டவர்கள் என்பதனை மக்கள் - பயணிகள் மறந்துவிடமுடியாது - மறந்து விடமாட்டார்கள்.

இவற்றுக்கு இடையில் மன்னார் மாவட்டத்தின் பின்தங் கிய பிரதேசங்களின் மாணவர்களுக்கு இலவச சேவை வழங்குவதற்கு தனியார் பேருந்து உரிமையாளர்கள் இலவச சேவை வழங்குவது சிறப்புக் கவனத்துக்கு உரியது பாராட்டப்பட வேண்டியதும் ஆகும்.

# மக்களின் சுதந்திரத்தைத் தேடும் சுதந்திரதினம்

சுதந்திர தினம், குடியரசு தினம் என்பன வற்றை உலக நாடுகள் கொண்டாடும் போது

கறுப்புக்கொடி கட்டி எதிர்ப்புத் தெரிவிப்பார் கள். தேசிய விழாக்களில் கலந்துகொள்பவர்களுக்கு

கிடைத்த சுதந்திரத்தை விடப் புலிகளை அழித்த தினம்தான் உண்மையான சுதந்திர தினம் என்ற



இப்படி ஒரு நாளை கொண்டாடமுடியாது இலங்கைத் தமிழ் மக்கள் தவித்தனர். சுதந்திர தினம், குடியரசு தினம் என்பனவற்றை கரி நாளாக துக்க தினமாக நினைத்த தமிழ் மக்களின் மனதில் சிறு நம்பிக்கைக் கீற்று பிறந்துள் ளது. ஆட்சியில் இருக்கும் சிங்கள அரசி யல் கட்சியின் அபிமானிகளான தமிழ் அரசியல் வாதிகள் மட்டும் இலங்கையின் தேசிய விழாக்களில் பங்கேற்பார்கள். தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழகில் கடைகளை மூடி

துரோகி என்ற பட்டம் வழங்கப்படும்.
விடுதலைப் புலிகள்

கருத்து சிங்கள மக்கள் மத்தியில் பரவியது. சிங்கள மக்களின்

**சுதந்திர தினம், குடியரசு தினம் என்பன வற்றை கரி நாளாக துக்க தினமாக நினைத்த தமிழ் மக்களின் மனதில் சிறு நம்பிக்கைக் கீற்று பிறந்துள்ளது. ஆட்சியில் இருக்கும் சிங்கள அரசியல் கட்சியின் அபிமானி களான தமிழ் அரசியல்வாதிகள் மட்டும் இலங்கையின் தேசிய விழாக்களில் பங்கேற் பார்கள். தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழகில் கடைகளை மூடி கறுப்புக்கொடி கட்டி எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். தேசிய விழாக் களில் கலந்துகொள்பவர்களுக்கு துரோகி என்ற பட்டம் வழங்கப்படும்.**

அழிக்கப்பட்டபின் சுதந்திர தினத்தின் கருப் பொருளே மாறியது. பிரிட்டிஷிடம் இருந்து

மீட்பராக அன்றைய ஜனாதிபதி மஹிந்த கருதப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கை அரசியலில் யாராலும் வெல்ல முடியாத தலைவர் என்ற பெருமை பெற்றவர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததனால் இலங்கை அரசியல் கள நிலவரம் மாற்ற மடைந்தது. நல்லிணக்க அரசாங்கத்தின் செயற் பாட்டுக்கு எதிரான சிங்கள அரசியல் தலை வர்களும் தமிழ் மக்களும் தமது எதிர்ப்பை வெளிப் படுத்தி வருகின்றனர்.

இலங்கையின் தேசிய கீதம் தமிழ் மக்களுக்கு அன்னியமாக உள்ளது. சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் மக்களிடம் இருந்து சிங்களத்தைத் தூரவிலக்கி வைத்தது. சிங்கள அரசாங்கங்கள் தமிழ் மக்கள்மீது அடக்கு முறையைப் பிரயோகித் ததன் காரணமாக தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடைவெளி அதிகரித்தது. இந்த இடைவெளியை குறைப்பதற்கு சிங்களத் தலைமைகள் முயற்சி செய்யவில்லை. சிங்கள இனவாதத்தில் குளிர் காய்ந்து ஆட்சியில் இருப்பதையே அவர்கள் விரும்பினார்கள். நல்லிணக்க அரசாங்கம் தமிழ் சிங்கள மக்களுக்கிடையேயான இடைவெளியை குறைக்க முயற்சி செய்கிறது. சுதந்திர தின விழாவில் தமிழில் தேசிய கீதம் பாடியது அந்த முயற்சியின் ஆரம்பம்.

இலங்கை சிங்கள மக்களின் நாடு மற்றைய இனங்களுக்கு இங்கு உரிமை இல்லை. சிங்கள அரசாங்கம் கொடுப்பதை வாங்கிக்கொண்டு வாயை மூடிக்கொண் டிருக்க வேண்டும் , என்பதே சிங்கள அரசியல்வாதிகளின் நிலைப்பாடு. ஜனாதிபதி மைத்திரி பிரதமர் ரணில் ஆகியோர் தமிழ் மக் களையும் அரவணைத்துச் செல்ல விரும்புகின்றனர். தமிழில் தேசிய கீதம் பாடக்கூடாது என்பதே முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் நிலைப்பாடு. அவருக்கு விசுவாசமான அரசியல்வாதிகளும் இதனையே விரும்புகின்றனர்.

சுதந்திர தின விழாவில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதை அதிகமான தமிழ் மக்கள் வரவேற்றுள்ளனர். நல்லிணக்க அரசாங்கத்தின்இந்த சாதக சமிக்ஞையை சிங்கள மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையாக இருப்பதை விரும்பாத சிலர் இதனைக் கடுமை யாக எதிர்க்கின்றனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விசுவாசமான பொது எதிரணி சுதந்திர தின வைபவத்தைப் புறக்கணித் தது.

**புலிகளை அழித்து சிங்கள் மக்களின் மனதில் இடம் பிடித்த முன்னாள் ஜனாதிபதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுதந்திர தின வைபவத்தைப் பகிஷ்கரித்தார். 2009 ஆண்டு புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற சுதந்திர தின விழாக்கள் அனைத்தும் இராணுவத்தின் பலத்தை வெளிக்காட்டும் பெரு விழாவாக நடைபெற்றன.**



புலிகளை அழித்து சிங்கள் மக்களின் மனதில் இடம் பிடித்த முன்னாள் ஜனாதிபதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுதந்திர தின வைபவத்தைப் பகிஷ்கரித்தார். 2009 ஆண்டு புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற சுதந்திர தின விழாக்கள் அனைத்தும் இராணுவத்தின் பலத்தை வெளிக்காட்டும் பெரு விழாவாக நடைபெற்றன. சுதந்திர தினத்தைப் பார்க்கச்சென்றவர்கள் கடுமையான பரி சோதனையின் பின்னரே அனுமதிக்கப்பட்டனர். தலை நகரில் இருந்த தமிழ் மக்கள் வீட்டில் இருந்து தொலைகாட்சி யில் சுதந்திர தினத்தைக் கண்டு ரசித்தனர்.

திருகோணமலை, வவுனியா, மன்னர், மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் சுதந்திரதினத்தன்று எதிர்ப்புத்தெரிவித்து மக்கள் போராட்டம் நடத்தினர். காணாமல் போனோர், கடத்தபட் டவர்கள், தமிழ் அரசியல் கைதிகள் ஆகியோரின் உறவினர்கள், மீள்குடி யேற்றப்படாதோர், மீனவர்கள், சம்பூர் அனல் மின் நிலையத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிக்காட் டினர். கடந்த காலங்களைப் போன்று சுதந்திர தினத்துக்கு பெரியளவான எதிப்பு தமிழ் பகுதிகளில் இருக்கவில்லை. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கறுப்புக்கொடி கட்டப்பட்டிருந்தது.

கொழும்பில் நடைபெற்ற சுதந்திர தின வைபவத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டு புதிய வரலாறு படைக்கப் பட்டது. தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டது. தமிழில் தேசிய கீதம் பாட வேண்டும் என்ற ஆர்வம் அங்குள்ள அரசாங்க உத்தியோகத்தர்களிடம் இருக்கவில்லை.

**கொழும்பில் நடைபெற்ற சுதந்திர தின வைபவத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டு புதிய வரலாறு படைக்கப்பட்டது. தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டது. தமிழில் தேசிய கீதம் பாட வேண்டும் என்ற ஆர்வம் அங்குள்ள அரசாங்க உத்தியோகத் தர்களிடம் இருக்கவில்லை.**

எதிர்க் கட்சித்தலைவர் ஆர்.சம்பந்தனும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கடந்த ஆண்டைப்போல இந்த வருடமும் சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டனர். வழமை போன்று அவர்களுக்கு எதிரான விமர்சனங்களும் கூடவே முன்னெழுந்தன.

சுதந்திரதினக்கொண் டாட்டத்தின் ஒரு அங்கமாக சிறைக் கைதிகள் விடுதலைசெய் யப்பட்டனர். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு சட்டத்திலிடம் இல்லை. ஆனால், சிறு குற்றம் செய்து சிறைத் தண்டனை பெற்றவர்கள் சுதந்திர தினத்தன்று சுதந்திரமாக வெளியில் செல்வது எழுதப்படாத சட்டமாக உள்ளது. பாரிய குற்றம் செய்யாதவர்கள் மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள். சுதந்திர தினத்தன்று மன்னிக்கப்பட்டு விடுதலையானவர்கள் திருந்தி வாழவேண்டும். அவர்கள் சமூக நீரோட்டத்தில் கலந்து நற்பிரஜையாக வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகின்றது.

சுதந்திர தினத்தன்று விடுதலையானவர்கள் அனைவரும் சமூகத்தில், நற்பிரஜையாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் அவர்களில் எத்தனை பேர் குற்றம் செய்கிறார்கள் என்ற விபரம் வெளிவருவதில்லை.

நல்லிணக்க அரசாங்கத்தின் இம்முறை சுதந்திர தினம் சிறிது முன்னேற்றத்தைத் தந்துள்ளது. இந்த நம்பிக்கை ஒளியை பிரகாசமடையச்செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது.

**- வானதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலில் ஆரம்பம் கொலையில் முடிவு

**நா**ன் காதலித்த பெண்ணினால் என் மனம் காயப்பட்டுப் போனது. என்னுடைய காதல் தோல்வி என்னை எங்கோ, எப்படியெல்லாமோ வாழ வைத்துவிட்டது.

காதலியினால் வெறுத்து ஒதுக்கப்பட்ட நான் என் சொந்த மண்ணையும், சொந்தங்களையும் விட்டு வெகு தூரம் வந்துசேர்ந்தேன்.

எனினும், அதற்குப் பிறகும் என்னுடைய பயணம் முட்கள் நிறைந்ததாகவே காணப்பட்டது. சேரக் கூடாத இடத்தில் சேர்ந்து செய்யக் கூடாத பெரும் தவறைச் செய்துவிட்டேன். அதனால் தான் எனக்கு இன்று இப்படியொரு தண்டனை.

இது கொலைக்குற்றத்துக்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் தன் விடுதலை நாள்களை எண்ணிக்கொண்டிருக்கும் தர்ஷனவின் புலம்பலாகும். அவன் மனம் திறந்து கூறுகையில்,

நான் என் குடும்பத்தில் இளையவன். எனக்கு இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் இருக்கின்றார்கள். சகோதரர்கள் இருவரும் திருமணம் முடித்து அயலூரில் வசித்து வருகின்றார்கள்.

என் தந்தை விவசாயி. நான் கல்விப்பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை எழுதிய போதும் எனக்கு உயர்தரத்தை தொடரும் அளவுக்கு பெறுபேறுகள் அமையவில்லை.

எனவே, நான் எனது தந்தைக்கு உதவியாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். எனது வீட்டைச் சுற்றி இருந்தவர்கள் எல்லாருமே என் தந்தையின் உறவுக்காரர்கள்.

**என் கண்ணெதிரே நான் விரும்பிய ஒரு பெண் இன்னுமொருவரை திருமணம் செய்துகொள்வதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை..**

**நான் அங்கிருந்தால் என்னை அறியாமல் மதுவந்திக்கும், மாமிக்கும் ஏதும் செய்துவிடுவேனோ என்ற பயம் எனக்குள் இருந்தது.**

என் தந்தையின் சகோதரியின் வீடு எங்கள் வீட்டுக்கு பக்கத்தில் இருந்தது. என் மாமிக்கு இரண்டு பெண்பிள்ளைகள். மூத்த மகள் என்னை விட பெரியவள். இரண்டாவது மகள் என்னை விட இளையவள்.

அவள் தான் மதுவந்தி (பெயர் மாற்றப்பட்டுள்ளது.) பார்ப்பதற்கு அழகாக இருப்பாள். சிறுவயது முதலே மதுவந்தி என் மீது மிகுந்த அன்புடனும் அக்கறையுடனும் இருப்பாள்.

அதுவே பருவ் வயதை அடைந்தவுடன் காதலாக மாறியது. நானும் மதுவந்தியும் காதலித்தோம். அவள் என்னை உண்மையாக காதலித்தாள். எனினும், என் மாமிக்கு எங்கள் காதல் விவகாரம் பிடிக்கவில்லை.

என் மகளை ஒரு விவசாயிக்கு திருமணம் செய்து வைக்க மாட்டேன் என்று கூறி என்னைப் புறக்கணித்தார். அதுமட்டுமின்றி, ஊரிலுள்ள அனைவரிடமும் மாமி அப்படியே கூறியிருந்தார்.

எனவே எங்காவது போய் திருமணம் செய்துகொள்வோம் என்று மதுவந்தியை வீட்டை விட்டு வர சொன்னேன். எனினும், அவள் வர மறுத்து விட்டாள். பெற்றோருக்காக என் காதலை உதறித் தள்ள ஆரம்பித்தாள்.

மாமி அவளுக்கு நல்ல வசதியான வரன் ஒன்றை பார்த்தாள். மதுவந்திக்கு ஆரம்பத்தில் அந்த மாப்பிள்ளையை பிடிக்கவில்லை.

இருப்பினும், மாமியின் கட்டாயத்தின் பேரில் திருமணத்துக்கு சம்மதம் தெரிவித்தாள். எனவே, என் கண்ணெதிரே நான் விரும்பிய ஒரு பெண் இன்னுமொருவரை திருமணம் செய்துகொள்வதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை..

நான் அங்கிருந்தால் என்னை அறியாமல் மதுவந்திக்கும், மாமிக்கும் ஏதும் செய்துவிடுவேனோ என்ற பயம் எனக்குள் இருந்தது.

என்னால் எல்லோரையும் போல் சகஜமாக இருக்க முடியவில்லை. எனவே, நான் ஊரை விட்டுச் செல்ல தீர்மானித்தேன்.

நான் அதிகாலை 4 மணிக்கு எங்கள் ஊரிலிருந்து கொழும்பு நோக்கி புறப்படும் பஸ்ஸில் ஏறி இரகசியமாக கொழும்பு வந்து சேர்ந்தேன். குறைந்த பட்சம் என்னுடைய தாய், தந்தை கூட அதை அறிந்திருக்கவில்லை.

நான் வீட்டிலிருந்து புறப்படுவதற்கு முதல் நாள் இரவு எல்லோரும் நித்திரை கொள்வதற்கு முன்பே நான் நித்திரைக்கு சென்றேன்.

அதன்பின் எல்லோரும் நித்திரைக்கு சென்று ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் நேரத்தில் நான் வீட்டை விட்டு வெளியேறினேன்.

எனக்கு வீட்டிலிருந்து எடுத்து வர பெரிதாக எதுவும் இருக்கவில்லை. இரண்டு மூன்று சேட், காற்சட்டைகளை மட்டுமே பையொன்றில் போட்டுக்கொண்டு வந்தேன்.

சந்தியில் பஸ் நிறுத்தப்பட்டிருந்தது. பஸ்ஸிலிருந்தவர்கள் யாரும் என்னை அடையாளம் காணவில்லை. எனினும், பஸ் சாரதியும், பஸ் நடத்துநரும் என்னை எப்படியோ அடையாளம் கண்டுகொண்டார்கள்.

அவர்கள் என்னிடம் நீ குணபாலின் மகன் தானே? எங்க தம்பி இந்த அதிகாலையில் போகின்றீர்கள்? என்று வினவினார்கள்.

அதற்கு நான் இல்லை அங்கிள் கொழும்பிலிருக்கும் மாமியின் வீட்டுக்கு போகின்றேன் என்று பதிலளித்து, எனக்குரிய யன்னல் ஓரத்திலுள்ள ஆசனத்தில் அமர்ந்துகொண்டேன். அதன்பின் பஸ் வண்டி அதன் பயணத்தை ஆரம்பித்தது.

அதிகாலையில் வீசும் சில்லென்ற தென்றல் காற்று என் மனதுக்கு இதமாக இருந்ததுடன், என்னைப் பலவாறு சிந்திக்கவும் வைத்தது.

அந்த நேரம் வரை எனது பயணத்தின் நோக்கம் எனக்கே தெரியாது. அன்றைய நிலையில் எனக்கு ஊரை விட்டுப்போனால் போதும் என்பது மட்டுமே என் சிந்தையில் ஓடிக்கொண்டிருந்தது. நான் ஒருவழியாய் கொழும்பு வந்துசேர்ந்தேன்.

கொழும்புக்கு வந்தவுடன், எனக்கு தங்குவதற்கு என்று ஒரு இடம் இருக்கவில்லை. பாதைகளும் சரியாக தெரியாது. பல நாள் கொழும்பில் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தேன்.

இறுதியில் கொழும்பு புகையிரத நிலையத்துக்கு முன்பாக இரவு நேரங்களில் ஒரு பிச்சைக்காரனைப் போல் உறங்கி வந்தேன்.

அந்த நாள்கள் மிகவும் கொடூரமானவை. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் தான் புகையிரத நிலையத்துக்கு முன்பாக வைத்து முதலாளியொருவரை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது..

அவர் என் கைகளைப் பிடித்துக் கொண்டு, நீ பல நாள் இந்த இடத்தில் இருப்பதை அவதானித்திருக்கின்றேன். நீ வா என்னோடு போகலாம் என்று அழைத்தார்.

நானும் செல்வதற்கு இடம் இல்லாமல் தவித்துக்கொண்டிருந்ததால் அவருடன் செல்லச் சம்மதித்தேன். அதன்பின் அவர் என்னை காரில் ஏற்றி அவருடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

விசாலமான காணி பரப்பில் ஓங்கி வளர்ந்து நிற்கும் தென்னை மரங்களுக்கு நடுவே அவருடைய சொகுசு வீடு அமைந்திருந்தது..

ஒரு நிமிடம் எனக்கு பிரமிப்பாக விருந்தது. என்னுடைய வாழ்நாளில் அப்படியொரு வீட்டை நான் நேரில் கண்டது கிடையாது.

அவர் வீட்டுக்குள் அழைத்துச் சென்று எனக்கென்று தனியான அறையொன்றை ஒதுக்கிக் கொடுத்தார். அதன்பின் எனக்கு வயிறு நிறைய உண்ண உணவு கொடுத்து ஓய்வு எடுக்கச் சொன்னார்.

நன்றாக சாப்பிட்டு முழு நாளும் நித்திரைகொண்டேன். அதற்குப் பிறகு தான் எனக்கு புதுத் தெம்பொன்று வந்தது. மறுநாள் காலை முதலாளி என்னை அவருடைய காரில் வெளியில் அழைத்துச் சென்றார். அப்படிப் போகும் வழியில் தான் அவர் என்னைப் பற்றிய விடயங்களை கேட்டறிந்து கொண்டார்.

நான் என்னுடைய காதல் விவகாரம் எல்லாவற்றையும் அவரிடம் மறைக்காது கூறினேன். அவை எல்லாவற்றையும் கேட்டறிந்த அவர், தம்பி இந்த கொழும்பு நகரில் ஒன்றுக்கு இரண்டு பெண்பிள்ளைகளை பார்க்கமுடியும்.

அதை எல்லாம் நினைத்து கவலைப்படாதே.. நான் உனக்கு சம்பளமொன்று தருகின்றேன்.. நீ நான் சொல்வது போல் இந்த வீட்டில் எனக்கு விசுவாசமாக இருந்தால் போதும் என்று கூறினார்.

அதன் பிறகு நான் அந்த வீட்டில் இருந்தேன். அங்கு எனக்கென்று பெரிதாக வேலைகள் எதுவும் இருக்கவில்லை. முதலாளியின் வீட்டில் அவரும், சமையல் வேலைகளை பார்ப்பதற்கு என்று ஒரு வயதான பெரியவருமே இருந்தார்கள்.

மனைவி, பிள்ளைகள் என்று யாரும் இருக்கவில்லை. நான் அது தொடர்பாகத் தேடி பார்க்கவும் விரும்பவில்லை. முதலாளி வீட்டில் இருப்பது குறைவு.

எப்போதாவது தான் வீட்டிற்கு வருவார். அதுவும், சில நாள்களில் நள்ளிரவில் வேனில் வந்து ஏதோ பொருட்களை இறக்குவார்.

அதுமட்டுமின்றி, இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை முதலாளியுடன் யாராவது ஒரு பெண் வீட்டுக்கு வந்து போவார்கள்.

முதலாளி ஒரு நாள் என்னிடம் வந்து லேனர்ஸுக்கு சென்று டிரைவிங் பயிற்சி எடுக்குமாறு கூறி பணம் கொடுத்தார். அதன்படி நானும் லேனர்ஸுக்கு சென்று பயிற்சி பெற்று சாரதி அனுமதி பத்திரத்தைப் பெற்றுக்கொண்டேன். அதன்பின் முதலாளி அவருடைய காரை எனக்கு கொடுத்து ஓட்டச் சொன்னார்.

இதற்கிடையில், ஒரு நாள் முதலாளியை தேடி பெண்ணொருவர் வீட்டுக்கு வந்தார். அவர் பார்க்க அழகாகவும், கவர்ச்சியாகவும் காட்சியளித்தார்.

நான் உடனே யாருக்கும் தெரியாமல் முதலாளியின் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தி விடயத்தை சொன்னேன். அதன்பின் முதலாளி உடனடியாக வீட்டுக்கு வந்தார்.

அப்போது தான் அவர் முதலாளியின் மனைவி என்பதை நான் அறிந்து கொண்டேன்.. அவர் ஒரு வாரம் வரை

**(22 ஆம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரோடி பரஞ்சோதியார் சொல்லுறார் கேளுங்கோ...



- முத்தமிழன்

" எல்லோருக்கும்வணக்கம்"

நான்தான்பாருங்கோ உங்கட பரஞ்சோதி. வந்திருக்கிறன்.வந்தால் நான் ஏதும் நல்ல அலுவல் சொல்லித்தான் ஆகவேணும். ஏனெண்டால் பாருங்கோ நீங்களும் எதிர்ப்பியன்தானே...

நான்சொல்லுறது விளையாட்டான அலுவல் இல்லை. விளையாட்டா எடுத்துப்போடா தேங்கோ...

இந்த வாரமும் ஒரு விசயத்தைச்சொல்ல ஆசைப்படுகிறன்....ம்... ம்..

இப்ப பாருங்கோ குடிக்கிறது வெறிக்கிறது எண்டு சொன்னா அது ஒருநாகரீகமா போச்சுது... இப்ப குடிக்கிறதுக்கு வயசு வேறுபாடில்லை... படிக்கிறதுகளே குடிக்குதுகள்... குடிக்காட்டி நாகரீகம் இல்லை எண்டு சில இளசுகள் கதைக்கிறதும் என்ரை காதிலவிழுந்திருக்கு.. அந்தக் காலத்திலை பாருங்கோ... எங்கட அப்பு குடிக்கிறார்... வெறிக்கிறார்... வீட்டில சத்தம் போடுறார் எண்டு எங்களுக்குச் சரியான வெக்கம்... இன்னாற்றை மகனோ எண்டு கேட்டாலே பேர் சொல்ல ஒரு தயக்கம் அந்தக் காலத்திலை... அப்ப என்னெண்டால் குடிக்கிறவனை ஒருத்தரும் மதிக்கிறேல்ல... குடிகாறன் எண்டா பொம்பிளையும் குடுக்க மாட்டாங்கள் அந்தக் காலத்திலை... அதுகும் போக குடிச்சு வெறிக்கிறதெண்டால் ஆரும் வயது போனதுகள் தான் குடிச்சு வெறிக்குங்கள்.. எங்கட அப்பர் குடிச்சார் எண்டால்... வீட்டில் பெரிய சத்தம்... பாட்டும் கூத்தும்... கும்மாளமும் தான். சில வேளையில அப்பருக்குக் கோபம் வந்துதெண்டால் காணும், சட்டி பானையள் பொலுபொலுவெண்டு முத்தத்திலை வந்துவிழும்... சில வேளையில அம்மாவிலை அப்பர் பொக்சிங் பழகுவார்... அம்மா அழுது புலம்புவா..

ஆனா ஆரும் கிட்டப்போறேல்ல... அம்மா அழுதா நாங்கள் ஓடிப்போவம் சிலவேளையில அப்பர் எங்களில கராட்டியும் பழகுவார்... அவர் குடிக்காட்டில் நல்ல மனிசன்... சாதுவான ஆள்... பாக்கப் பாவமாக இருக்கும்..நல்ல மனுசனுக்குள்ள நஞ்சு புகுந்தால் தான் ஆள் பரம்பரம்ஆடத்தொடங்குவார்... சிலவேளையில எங்கட அம்மாவும் பல்லவியை எடுத்துவிடுவா... என்ன பல்லவி தெரியுமே.... "குடிகாரன போயும்போயும் கலியாணம் முடிச்சனே நான்" இது தான் பல்லவி. குடிகாரன் பேச்சு விடிஞ்சாப்போச்சு சென்ட மாதிரி இரவிரவா முறுக்கி எடுக்கிற மனுசன் விடிஞ்சாப் போதும் ஆள் பெட்டிப் பாம்பு மாதிரி அடங்கிப்போடுவார். ஆளை பாக்க பரிதாபமாக இருக்கும். அப்பர் நல்ல

மனிசன்தான்.. ஆனா குடிச்சால் ஆளின்ர குணம் குறியெல்லாம் மாறிப்போகும்... விடியவில ரண்டு கால்லை போற அப்பர் பின்னேரமானா நாலு காலிலை தான் வீட்டை வருவார்... ஏன்தான் உப்பிடி நல்ல மனிசன் காசைக் குடுத்து கறுமத்தைச் சுமந்து கொண்டு வீட்டை வருகுதெண்டு நானும் சில வேளை யோசிச்சுப் பாத்திருக்கிறன். நாங்கள் சிறுசா இருக்கேக்கை முன்நூறுக்கும் வேலை செய்துபோட்டு எங்கடை அப்பர் அம்மாட்டை நூறைக்குடுத்திட்டு நண்டுப்பொரியலும் மூக்குமுட்ட சோறும் கேட்டு கேட்டு நாரிமுறிய அம்மாவுக்கு பொக்சிங் கொடுத்த நாளும் இருக்குது... ம்.. அது அந்தக்காலம் அப்பர் எங்கடை அம்மாவுக்கு செய்த தில்லுமுல்லுகளைப் பார்த்து உந்த குடிவெறி பழக்கத்தை நாங்கள் நினைச்சே பாக்கேல்லை. குடிவெறி எண்டால் எனக்கு ஜென்மத்துப்பகை... குடிச்சு வெறிச்சு காசையும் கரியாக்கி அதால கெட்ட பேரும் வாங்கி ஏன்உந்தக்கண்டறியாத குடிப்பழக்கம்... ம்.. இண்டுவரையும் நான் உந்தக் கண்றாவியை பழகேல்லை...... ஆனா இப்ப பாருங்கோ உதுகளெல்லாம் சர்வ சாதாரணம். குடிக்கிறதுக்கு வயசு வேறுபாடில்லை... முன்ன பழசுகள் குடிச்சுதுகள். இப்ப புதுசுகள் அல்லோ குடிக்குதுகள். குடிக்கிறதுதானாம்

ஏதோ நாகரீகமாம்..கலியாண வீடோ, செத்தவீடோ, என்ன நிகழ்வோ எதெண்டில்லை, எல்லா இடமும் ஒரே குடியும் கூத்தாட்டமும் தான்....

கிட்டடியில ஒரு செத்தவீட்டுக்குப் போயிருந்தன்... அடக்கடவுளே அதையேன் பேசுவான்.. ஏதோ பெட்டிபெட்டியா கொண்டுவந்து... இறக்கிறாங்கள்... எனக்கு விசயம்விளங்கேல்லை.. பிறகுதான் ஒரு பெடியனட்டை கேட்டு அறிஞ்சா அது சாராயப்பெட்டி எண்டு சொன்னான் அந்தப்பெடி... ஐயோ பாவம் அந்த செத்தமனிசன் காலை நீட்டி கிடக்குது. பிள்ளையள் சாராயத்தில முழுகுதுகள்... பாக்க எனக்குத்தலை விறைச்சுப் போச்சுது... உந்த சின்னப் பொடியள்... வயசுபோன என்னையும் பொருட்படுத்தாமல் விட்டுக்கட்டுறாங் கள்... நான் ஒதுங்கிய மாதிரி ஒரு

மூலையிலை இருக்கிறன்...அந்தப் பொடியள் ஆடுறாங்கள், பாடுறாங்கள், சத்தி எடுக்கிறாங்கள்... கடைசியா ஒரு பொடியன் வந்து என்னட்டைக் கேட்டான் பாருங்கோ... கொஞ்சம் அடிச்சுப்பாக்கச் சொல்லி... அடே எனக்கு உந்தப் பழக்கம் இல்லை எண்டு நான் சொன்னன். அதுக்கு அவன் என்ன சொன்னான் தெரியுமே... நீங்கள் வாழ்க்கையில அரைவாசியை இழந்திட்டியள் எண்டு.. ம்.. ம்.. எங்கட காலத்தில அப்பர் குடிக்க நான் வெக்கப்பட்டன்... இப்ப இந்தச் சின்னனுகள் எனக்கு எப்பிடி புத்தி சொல்லுதுகள் எண்டு எனக்குக் கவலையாப் போச்சுது பாருங்கோ... இது கலியுகம் எண்டு மனதுக்குள் நினைச்சுக்கொண்டிருக்க... இன்னுமொரு கன்றாவி என்ன தெரியுமே... பொடியள் குடிச்சு வெறிச்சுக்கொண்டிருக்க... அதில குடிக்கிற பொடியன்ர தகப்பன்காரன் வந்துபொடியனிட்ட கேட்டார் பாருங்கோ... என்னதெரியுமோ... எடே எனக்கு ஏதும் மிச்சம்கிச்சம் இல்லையோ எண்டு... எனக்கு அப்படியே தலை விறைச்சுப்போச்சு.. தகப்பனைக்கண்டு பொடியன் பயப்படவும் இல்லை. பொடியனைக் கண்டு தகப்பன் வெக்கப்படவும் இல்லை. கடவுளே.. கடவுளே.. இப்பிடியும் ஒரு நாகரீகமோ எண்டு எனக்குள்ளை நான் கேள்விகேட்டன்..நாகரீகம் அநாகரீகமாகப் போய்ச்சுது இப்பத்தைய வாழ்க்கை...இதை ஆரிட்டச்சொல்லி அழுகிறது...?

முந்தின காலத்தில வயசுபோனாக்களைத்தனான் உங்கினை சாராயம், கள்ளுக்கடையளில காணலாம்.. இப்ப வயது போனதுகளைக்காணுறது கஸ்டமாத்தான் கிடக்குது... மாலை நேரங்களில சாராய கடையளில பாருங்கோ ஆர் முண்டியடிக்குதுகள் எண்டு.. உந்த இளசுகள்தான் - கோயில்ல அர்ச்சனை வாங்க முண்டியடிச்ச மாதிரி முண்டியடிக்குங்கள்..

அதுபோக செத்த வீட்டிலை மட்டும் இல்லை கலியாண வீட்டிலை மாப்பிளையும் சேர்ந்து தண்ணியடிச்சா... அது கலியாணமோ.. அண்டைக்கு ஒரு கலியாண வீட்டிலை மணவறையில இருந்த மாப்பிள்ளை இடக்கிடை பின்னுக்குப் பின்னுக்கு போட்டு வந்தார். கடைசியில சத்தியெடுத்த மாப்பிளைக்கோலத்தோடை தள்ளாடி விழுந்திட்டார்... அதுக்குப்பிறகுதான்

பொம்பிளைக்குத்தெரியும் மாப்பிள்ளை குடிக்கிறவர் எண்டு என்ன செய்யிறது தாலியைக் கட்டிப்போட்டான் எண்டு ஒரு மாதிரி சமாளிச்சு கலியாண கொண்டாட்டம் முடிஞ்சு போச்சு...

இப்படியா உலகம் போய்க்கொண்டிருக்குது பாருங்கோ.... இதுகளுக்கு பெத்ததுகளும் உடந்தை எண்டுதான்சொல்லவேணும்... ஒரு பிள்ளை எங்கை போறன்வாறன் எண்டு கண்காணிக்கிறது. பெற்றோரின்ர கடமை. இல்லாட்டில் இப்பிடிச் சபை சந்தியில... ஏன் மாப்பிளைக் கோலத்திலையும் தள்ளாட வேண்டித்தான் வரும்... அதுக்குப்பிறகு வெக்கப்பட்டு துக்கப்பட்டு ஒரு பிரயோசனமும் இல்லைப் பாருங்கோ... வெள்ளம் வரமுதல்தான் வரம்பு கட்டவேணும்... இது கலியுக காலம் நல்ல பழக்க வழக்கங்களை ஆரும் சொல்லிக் கொடுக்க மாட்டுதுகள்... நாகரீகம் எண்டு அனாகரீகத்தைத்தான் பழக்கப் பாக்குங்கள்... சிலபேர் நினைக்கிறது தான்கெட்டாலும் மற்றவன் கெடக்கூடாதெண்டு... இன்னும் பேர் நினைப்பினம் தன்னைப்போல அவனையும் கெடுக்க வேணும்மெண்டு... இதை அறிஞ்சு தெரிஞ்சு நல்ல மனிசரோட சேரப் பழகவேணும்... எனக்கொரு நண்பன் சொன்னான் நீ இதைக் குடிக்காட்டி உன்னோடை கதைக்க மாட்டன் எண்டு.. நான் சொன்னன் உப்பிடிக் குடிக்கிற நண்பன் எனக்குத்தேவை இல்லை எண்டு. அதோடை போன சிநேகிதன் தான்... இப்ப முப்பது வருஷத்துக்குப்பிறகு என்னட்டை வந்து சொன்னான். "எடே நீ குடிக்காமல் இருந்ததால இண்டைக்கும் இளமையா இருக்கிறாய்.... என்னைப் பார் எண்டார்.. ஆளைப் பாக்கேலாது தலைமொட்டை, பல் விழுந்து, பாத்தால் பரிதாபம்.. குடி குடியைக்கெடுக்கும்... அதை எல்லாரும் உணரவேணும். சிலபேர் நண்பர்களைச் சேர்த்து வீட்டிலை குடிச்சு கும்மாளம் ...அதாலை தங்கட பிள்ளையளும், கெட்டுப் போகுங்கள் எண்டு நினைச்சுப் பார்க்கிறேல்லை. தயவுசெய்து இந்தப்பழக்கம் உங்களோடை போகட்டும்.. அதுக்கு மேலை நான் என்னத்தைச் சொல்லுறது. என்ர அனுபவத்தச் சொல்லிப்போட்டன். இதில புரிஞ்சு கொண்டால் சரி, இல்லாட்டில் நான் பாத்திரவாளி இல்லை... அப்பநான்போட்டு அடுத்தமுறை வாறன்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம் -61

பரபரப்போடு செய்தித்தாளைப் பிரித்த மக்கள் காஸ்ட்ரோவின் புகைப்படத்தைக் கண்டதும் பெரு மூச்சு விட்டனர். ஆவலுடன் செய்திகளைப் படித்தனர். காஸ்ட்ரோ உயிரோடுதானிருக்கிறார். அவர் தொடுத்த போராட்டம் நம் நலனுக்காகத்தான் என்ற உண்மைகளை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

காஸ்ட்ரோ சிறையில் அடைக்கப்பட்டார். சிறைக்குச் சென்ற ஒரு சில மணி நேரங்களிலேயே மெல்ல மெல்ல சக கைதிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். கிடைக்கும் ஒரு சில நிமிஷங்களில் போராட்டத்தைப் பற்றி எடுத்துக் கூறினார். புரட்சியை விளக்கினார். தனிமை கிடைத்தபோதும் உறங்கி விட வில் லை. சட்டப்புத்தகங்களை வாங்கி வைத்துக் கொண்டு படித்தார். தன்னைப் பார்க்க வரும் நண்பர்களிடமெல்லாம் இரண்டு விஷயங்களை வாங்கி வரச் சொல்வது அவர் வழக்கம். ஒன்று புத்தகம். மற்றொன்று சுருட்டு. நிறையப் படித்தார். அரசுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தினார் என்பதற்காகத்தான் சிறை. ஆனால், இங்கு காஸ்ட்ரோ தனது அடுத்த தாக்குதல் திட்டத்துக்காகத் தன்னை தயார் செய்து கொண்டிருந்தார்.

மிர்தாவும் ஃபிடலிட்டாவும் சிறைக்கு வந்தனர். காஸ்ட்ரோ இறந்து விட்டார் என்று முன்னர் அனைவரும் கூறிய போது அவர் அடைந்த வேதனையை விவரிக்க வார்த்தைகள் இல்லை. மெலிந்த உருவத்துடன் சிறைக்குள் அமர்ந்து ஃபிடலிட்டாவை கொஞ்சிக் கொண்டிருக்கும் தன் கணவனைப் பார்த்ததும் அவர் அழத் தொடங்கி விட்டார். ஃபிடலி ட்டாவுக்கு ஒன்றுமே தெரியவில்லை. அவனுக்கு அப்போது தான் நான்கு வயது நிரம்பி இருந்தது. தாவி வந்து தன் அப்பாவின் முதுகில் ஏறிக்கொண்டிருந்தான். தன் தந்தையின் சட்டையைப் பிடித்திழுத்து விளையாடிக் கொண்டிருந்தான். கனத்த இதயத்துடன் அவனை காஸ்ட்ரோவிடமிருந்து பிரித்து அழைத்துச் சென்றார் மிர்தா.

அதற்கடுத்த தினங்களில் சிறைக்காவலர்களை சிநேகம் பிடித்துக் கொண்டார் காஸ்ட்ரோ. அவர்களும் காஸ்ட்ரோவோடு எளிதாகப் பழகினார்கள். சதா புத்தகம் வாசித்துக் கொண்டும், கிறுக்கிக் கொண்டும் இருந்த அந்த மனிதன் ஆபத்தற்றவன் என்று அவர்களுக்குத் தோன்றியது. பிறகு காவலர்கள் மூலமாகவே செய்திகளை கேசரித்துக் கொண்டார்.

காஸ்ட்ரோவும் பிற கொட்டடியில் இருந்த தோழர்களும் செய்தி பரிமாறிக் கொள்ளும் முறை சுவையானது. ஒரு தோழர் குறிப்பொன்றை எழுதி தனக்குத் தெரிந்த வேறொரு கைதியிடம் கொடுப்பார். அந்தக் கைதி அதைப் பத்திரமாக மறைத்து வைத்திருந்து காஸ்ட்ரோ சிறையைக் கடந்து செல்லும் போது யாருக்கும் சந்தேகம் வராதபடி, காஸ்ட் ரோவை ஒரு கணம் கூட நிமிர்ந்து பார்க்காமல் தன் கை யிலிருந்த குறிப்பை அவர் பக்கமாக எறிந்து விடுவார். காஸ்ட்ரோ அந்தக் குறிப்பைப் படித்து விஷயங்களைத் தெரிந்து கொள்வார். பதிலுக்கு இவர் ஏதாவது எழுதி அனுப்ப வேண்டுமானாலும் இதே வழிமுறைதான்.

1953, செப்ரெம்பர் 21. விசாரணை தொடங்கியது. அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்பட்ட கலகக்காரர்களை விசாரிக்கப் போகிறார்கள் என்பதால் விசாரணை நடவடிக்கைகளை ரகசியமாக இருக்கும்படி பார்த்துக் கொண்டனர். தனி நீதிமன்றம். சிறப்புப் பாதுகாப்பு. யாருக்கும் அனுமதி கிடையாது. இப்படித்தான் தொடங்கியது விசாரணை. காஸ்ட்ரோ அழைத்து வரப்பட்டார். தான் எங்கே கூட்டிச் செல்லப்படுகிறோம் என்று அவருக்குத் தெரியாது. அமைதியாக வந்தார். இதோ இங்கு தான் விசாரணை என்று அதிகாரிகள் கூறியதும் நீதிமன்ற வளாகத்தை நிமிர்ந்து பார்த்தார். அவரால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. எந்த இடத்தில் புகுந்து தாக்குதல் நடத்தினார்களோ மிகச் சரியாக அந்த இடத்தில் தான் விசாரணை. தனது தோழர்களுடன் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு சென்ற அதே இடத்துக்கு மீண்டும் நுழைகிறார்.



பிரதம நீதிபதி பெனிட்டோ ஓசாரியோ. மூன்று நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். கைதிகள் சார்பில் வாதாட 2. வழக்கறிஞர்கள், சாட்சியங்கள். இவர்கள் தவிர ஆறு பத்திரிகையாளர்களும் வரவழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்பது குறித்து முன்னரே விரிவாக அறிவுறுத்தப் பட்டிருந்தனர். விசாரணையை அவர்கள் முழுவதுமாகப் பார்க்கலாம் என்றாலும் அவ்வளவு சுலபத்தில் எதையும் எழுதிவிட முடியாது. இது ஒரு கண்துடைப்பு வேலை தான். பின்னால் ஏதாவது பிரச்சினை எழுந்தால், பத்திரிகையாளர்கள் முன்னிலையில் தான் அனைத்து விசாரணைகளும் நடைபெற்றன என்று சொல்லி விடலாம் அல்லவா? பாடிஸ்டாதான் ஏற்கனவே நெருக்கடி நிலையை அறிவித்து விட்டாரே! பத்திரிகைகள் மட்டும் எப்படி தன்னிச்சையாக இயங்க முடியும்?

## சொற்சிலம்பம் போட்டி இல. 711

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | | 14 |
| 15 | | ■ | 16 | | ■ | 17 | |
| | ■ | 18 | | ■ | 19 | | |
| ■ | 20 | | | 21 | | ■ | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபுவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### மேலிருந்து கீழ்

1.சொல்லுதல்.
2.சாப்பிடு.
3.காடு.
4.குறுணிக்கற்கள்
5 தற்செருக்கு.
6.விலங்குகளுக்கு உதவும் உறுப்பு.
8.காசு.
10.இரப்பு
12.சூரியன்.
14. முப்புரம்.
16.படிப்பது இதனை.
18.புணர்வு
19.இல்லை என்பதைக் குறிக்கும்.
20.உருவமற்ற.
21 .புரம்

### இடமிருந்து வலம்

1. பழங்காலக் கதை.
5.அளவுக்கு மிஞ்சிய ஆசை.
7.சாளரம்.
8.வெளிச்ச வேலை.
9.திருமணம்.
11.ஒரு பக்கம்.
13.உழைத்துப் பெறு.
15.அந்தரப்படு.
16.கலம்.
17.தீர்வை.
18.தாண்டு.
19.முற்கால ஆயுதம்.
20.கழுவுதல்.
22.சிறிய புள்.
23.பொட்டு.

### சொற்சிலம்பம் போட்டி இல. 711

சொற்சிலம்பம் போட்டி 711ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2016 மார்ச் 02 மற்றும் மார்ச் 09 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 708இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | **லக்சிதா கருணாகரன்,** குளக்காட்டு பிள்ளையார் கோவில், முத்து ஐயன்கட்டு, ஒட்டிசுட்டான். |
| 2 ஆம் பரிசு | **பொன். கயிலாயபிள்ளை,** இல 77 ,2ஆம் பகுதி தொட்டியடி, விசுவமடு மேற்கு. |
| 3 ஆம் பரிசு | **ஞா. இம்மனுவல்,** இல 85/4, கார்மல் வீதி குருநகர், யாழ்ப்பாணம். |


பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் அலுவலக நேரத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 492 7419 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 709க்கான விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 1.பஞ்சமாபாதகம். | 1.பக்குவம். |
| 2.குமர். | 4.சகா. |
| 3.வழுக்கை. | 6.மழு. |
| 4. சடம். | 7.சுடர் |
| 5. கார். | 8.களம். |
| 7. சுளகு. | 11.மாலை. |
| 9.மலையகம். | 12.கைலாகு. |
| 10.கலாநிதி. | 14.பாயம். |
| 13.பெரியன்னை. | 15.சரி. |
| 17.அன்று. | 16.தக. |
| 18.திசை. | 17.அதிதி. |
| 20.பசி. | 19.கம்பன். |
| 22.வசி. | 21.சைவன். |
| | 23.சிறுமி. |
| | 24.சினை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கசிந்துருகும் பிள்ளைப்பாசம்

- ஆசாத்

கடந்தவாரம் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வன் யோஷித ராஜபக் ஷ குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்ட போது அவரை விளக்கமறியலில் தடுத்து வைக்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியை போரை வென்ற வீரநாயகனாகத் தன்னைச் சிங்கள மக்கள் மத்தியில் காட்டி வலம் வந்த மஹிந்த ராஜபக் ஷ கேள்விப்பட்ட போது கண்கள் கலங்கி விட்டாராம். எத்தனையோ ஆயிரம் பிள்ளைகளின் உயிர்களைப் பலிகொண்டு போரை வென்ற வீர நாயகன் தனது பிள்ளை சிறையில் அடைக்கப்பட்டான் என்றவுடன் வெலவெலத்துப் பேர்ய்விட்டார்.

மக்களைக் கொல்வது, மக்களின் உடைமைகளை அழிப்பது, சிறுபான்மை மக்கள் மேல் இனவாதிகள் மூலம் வன்முறைகளைக் கட்டவிழ்த்தும் பேரழிவுகளை ஏற்படுத்துவது போன்ற மனிதகுல விரோத நடவடிக்கைகளைத் தனது பெருமைக்குரிய கொள்கைகளாகக் கொண்டு செயற்பட்டு வந்த முன்னாள் பாதுகாப்புச் செயலர், சிறுபிள்ளையைச் சிறையில் அடைத்து விட்டனரென ஆதங்கப்பட்டிருக்கிறார். இந்தச் சிறுபிள்ளை கடற்படையில் ஒரு லெப்டினன்ட் தர அதிகாரியாக இருந்து செயற்பட்டு ஒரு குறிப்பிட்ட தொகை படையினரை வழி நடத்தியவர். ஒரு பெண் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் ரக்பீ வீரர் தஜுதீனை இவர் கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. எனினும் சித்தப்பா கோத்தாவுக்கு அவர் சிறுபிள்ளை தான்.

அதேவேளை ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக் கூட்டிணை இது ஓர் அரசியல் பழிவாங்கல் எனக் குக்குரலிட்டு வருகின்றனர்.

இப்படியாக யோஷிதவின் கைது தொடர்பான கண்டனங்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமாகிய பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவின் மகளான அப்சரா பொன்சேகா வெளியிட்ட கருத்து மிகவும் அவதானிக்கத்தக் கதாகும்.



தனது தந்தையார் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட போதும், ஊடகவியலாளர் பிரகீத் எக்கலிகொட கடத்தப்பட்டுக் காணாமற் போகச் செய்யப்பட்ட போதும், ரக்பி விளையாட்டு வீரர் கொல்லப்பட்ட போதும் அவர்களின் குடும்பத்தினர் அடைந்த துயரங்கள் மஹிந்த ராஜபக்ஷ குழுமத்தால் கணக்கில் எடுக்கப்படவில்லை எனவும், தற்சமயம் யோஷித கைது செய்யப்பட்ட போது அவர்களுக்கு பாசம் துடிக்கிறது எனவும் அப்சரா கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் குறிப்பிட்டதையும் விட ராஜபக்ஷ குடும்பம் பலமடங்கு ஏனைய மனிதர்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாமல், இரத்தவெறியுடன் நடந்து கொண்ட சம்பவங்கள் தாராளமாகவே உண்டு. கொலைகள், சித்திரவதைகள், ஆட்கடத்தல்கள், காணாமற்போகச் செய்தல், பதவிகளைப் பறித்து அவமானப்படுத்தல் நீண்டகாலம் சிறையில் தடுத்து வைத்தல், சித்திரவதைகளுக்கு உட்படுத்தல் போன்ற மனித குல விரோத நடவடிக்கைகளுக்குப் புன்னகையுடன் ஆசி வழங்கி ஆதரவு கொடுத்தவர்கள். அவர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஒரு பகுதியினரையும் கடற்படை அதிகாரிகளைக் கொண்ட குழுவினரையும் துணை இராணுவக் குழுக்களையும் வைத்து மேற்கொண்ட ஆட்கத்தல்கள், கொலைகள் அம்பலப்பட்டு வருகின்றன.

தங்கள் மகன் விளக்கமறியலில் வைக்கப்பட்டமைக்கே துடிதுடிக்கும் மஹிந்த ராஜபக் ஷவும், கோத்தபாய ராஜபக் ஷவும் ஏற்கனவே 20, 25 வருடங்கள் கூடத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாகக் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர். தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்கும்படி அல்லது நீதிமன்றில் நிறுத்தி பிணையில் விடும்படி கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய போது மஹிந்த ராஜபக்ஷ அவர்களை வெளியில் விட்டால், முன்னாள் புலி உறுப்பினர்களை அணி திரட்டி மீண்டும் பயங்கர வாத நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என ஓங்கி குரலெழுப்பியவர். கோத்தபாயவோ அவர்கள் அரசியல் கைதிகள் அல்லவெனவும் கொலை கொள்ளைகளில் ஈடுபட்ட குற்றவாளிகள் எனவும் கொக்கரித்தவர். இந்துசமயப் பூசகரான ரகுபதி சர்மாவும், அவரது மனைவியும் 15 வருடங்களுக்கு மேலாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருநதனர். சர்மாவுக்கு நீதிமன்றம் 300 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்க மனைவி குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டார். ஒரு தாயை தனது பிள்ளைகளை விட்டு எவ்வித குற்றமும் செய்யாத நிலையிலும்,

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனுஷ் நடிக்க வேண்டிய படத்தில் அதர்வா...

சமீபத்தில் அதர்வாவின் கணிதன் திரைப்படம் ரஜ... திரையிடப்பட்டது. படத்தைப் பார்த்த ரஜினிகாந் படக்குழுவை வெகுவாகப் பாராட்டியுள்ளார். இயக்குநர் சந்தோஷ் இயக்கத்தில் ஆக்ஷன் த்ரில்லர் படமாக உருவாகியுள்ள படம் கணிதன். கல்விச் சான்றிதழ்களை அடிப்படையாகக் கொண்டு நடக்கும் மோசடிதான் படத்தின் கரு.

நாயகன் அதர்வா, நாயகி கேத்ரீன் தெரசா ஆகிய இருவரும் செய்தியாளர்களாக நடித்திருக்கும் இந்தப் படத்தைப் பார்த்த ரஜினிகாந் கணிதன் படம் வெளியானதற்கு பின் அதர்வா மாஸ் நடிகர்களின் வட்டத்தில் இணைவார் எனப் புகழ்ந்துள்ளார்.

படத்தின் பாத்திரம் குறித்து சந்தோஷ், இந்தக் கதையை நான் எழுதும் போது தனுஷை மனதில் வைத்தே எழுதினேன். நான் அவரைச் சந்திக்க நினைத்த வேளையில் அவர் ஹிந்திப் படத்தில் தீவிரமாக இருந்தார். பின்னர் அதர்வாவிடம் கதை சொன்னேன். இப்போது படம் முடிந்த பிறகு பார்த்தால் தனுஷை விட அதர்வா குறைந்தவரில்லை எனத் தெரிகிறது என்றார்.

# பாட்டுத் தலைவனு... பாராட்டு விழா

அன்னக்கிளியில் தொடங்கிய தன் இசைராஜாங்கத்தை, பாடல்கள் என்ற ராஜபாட்டையில், ரசிகர்களை அழைத்துச் சென்று தாரை தப்பட்டையில் ஆயிரம் என்ற எண்ணிக்கையைத் தொட்டிருக்கிறார் இசைஞானி இளையராஜா.

இதற்காக தாரை தப்பட்டை வெளியீட்டுக்கு முன்னரே பாராட்டு விழா நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றாலும், மழைவெள்ளம் காரணமாக தள்ளிப்போனது.

தற்போது இளையராஜா சங்கீத முகாமைத்துவ நிறுவனமும், விஜய் தொலைக்காட்சியும் இணைந்து இந்த விழாவை நடத்த திட்டமிட்டுள்ளார்கள்.

இந்த மாதம் சென்னையில் நடைபெற இருக்கிற இந்த விழாவுக்கான இடம் மற்றும் ரிக்கெற் விபரங்கள் விரைவில் வெளியாகும் என விஜய் ரீவி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.





# நயன்தாராவிடம் சோதனை

தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகை நயன்தாரா. இவர் தற்போது இருகன் படத்துக்காக மலேசியா சென்றுள்ளார்.இந்த நிலையில் மலேசியா விமான நிலையம் இவர் சென்ற போது, நயன்தாராவிடம் போதை மருந்து இருப்பதாக யாரோ கூற, அவரிடம் சோதனை நடந்ததாக தமிழகத்தின் முன்னணி தொலைக்காட்சி ஒன்றில் கூறினர். ஆனால், இந்த செய்தி எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை, ஆனால், சமூக வலைத்தளங்களில் இச்செய்தி வைரலாக பரவி வருகின்றது.

# ஏன் நடித்தார் கமல் விளம்பரத்தில்

விளம்பர படங்களில் நடிக்க மாட்டேன் என்று உறுதியாக இருந்த கமல் அண்மையில் முதன் முதலாக ஒரு விளம்பரத்தில் நடித்திருந்தார். இதுபற்றி முதன்முறையாக கமல்ஹாசன் பேசும் போது எந்த உதவி செய்தாலும் அது யாருக்கும் தெரியாமல் செய்ய வேண்டும். நானும் ஒரு பத்திரிகை அதிபரும் இணைந்து 7 ஆயிரம் எய்ட்ஸ் பாதித்த குழந்தைகளை தத்தெடுத்து அவர்களுக்கான உதவிகளை செய்து வருகிறோம். என் ரசிகர்கள் 20 கோடிக்கு மேல் தங்கள் சொந்தக் காசை போட்டு நற்பணி செய்திருக்கிறார்கள். என் பங்குக்கு நானும் ஏதாவது செய்ய வேண்டும் என்பதினாலேயே விளம்பரத்தில் நடித்தேன் என்றார்.

# கெத்து பட வழக்கில் புதிய திருப்பம்

கெத்து படத்துக்கு யூ சான்றிதழ் கிடைத்தும் வரிவிலக்கு கிடைக்கவில்லை. இதனால் சென்னை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் உதயநிதி.தற்போது விசாரணைக்கு வந்த இந்த வழக்கில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. உதயநிதி ஸ்டாலின் நடிப்பில் வெளிவந்துள்ள கெத்து படத்துக்கு வரிவிலக்கு வழங்க மறுத்த அரசாணையை ரத்துச் செய்ய வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது இந்த தகவலை உதயநிதியே தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.



# வேதாளம் கன்னடத்தில்

நடிகர் அஜித் நடிப்பில் வெளிவந்து மிகவும் பிரபலமான வேதாளம் திரைப்படம் கன்னடத்தில் மறுபதிப்புச் செய்யப்படுகிறது.இந்தப் படத்தை கன்னட புகழ்பெற்ற இயக்குநர் சுதிரின் மகன் நந்தா கிஷோர் இயக்கவுள்ளார். மேலும் கன்னட பவர் ஸ்டார் புனித் ராஜ்குமார் அஜித் கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கவுள்ளராம்.இந்தப்படத்தின் படப்பிடிப்பு இந்த மாதம் இறுதியில் அல்லது அடுத்த மாதத்தொடக்கத்தில் தொடங்கும் என்கிறது கன்னட வட்டாரம். இதற்கு முன்பு கிஷோர் தமிழில் வெளிவந்த வருத்தபடாத வாலிபர் சங்கம் படத்தை மறுபதிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...னுக்கு



## சிம்புவின் திரையுலகப் பிரவேசம்

குழந்தை நட்சத்திரமாக உறவைக் காத்த கிளியில் ஆரம்பித்து சிம்புவின் திரையுலக வாழ்க்கை. நம் மக்களுக்கு குழந்தை நட்சத்திரங்கள் என்றாலே ஒருவித அன்பு பெருகி, கொண்டாடுவார்கள். கமலஹாசன் தொடங்கி, அஞ்சு, மாஸ்டர் கணேஷ், மாஸ்டர் மகேந்திரன், ஷாலினி, ஷாமிலி, என்று இன்றைய சாரா வரை தம் வீட்டுப் பிள்ளைகள் வளர்வது போல மகிழ்வார்கள். சிம்புவின் வளர்ச்சியும் அப்படித்தான் இருந்தது. 1984ல் உறவைக்காத்த கிளியில் ஆரம்பித்து கிட்டத்தட்ட 10 படங்களுக்கு மேலாக சிம்புவை மக்கள் கவனிக்கத் தொடங்கி, ரசிக்கவும் தொடங்கி இருந்தார்கள். அதுவும் 1989ல் வெளியான சம்சார சங்கீதம் படத்தில் சிம்பு ஆடிய ஐ ஆம் எ லிட்டில் ஸ்டார் பாடலை அப்படி ரசித்தார்கள். அப்படித்தான் சிம்புவின் திரையாலகப் பிரவேசம் அமைந்தது.



இளைய தளபதி விஜய் நடிப்பில் அட்லீ இயக்கத்தில் தெறி படம் விரைவில் வெளியாக இருக்கிறது. இந்தப் படத்தின் கட்டவுட்டுக்களே பல சாதனைகளை செய்து வருகின்றது.இந்த நிலையில் சில நிமிடங்கள் இந்த கட்டவுட்டை யாரோ முடக்க, இதனால் படக்குழு மிகுந்த அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது. இது குறித்து அட்லீ படக் குழுவினர்கள் மிகுந்த அதிர்ச்சியில் இருப்பதாகவும், இதில் பல பேரின் உழைப்பு அடங்கியுள்ளது, இச்சம்பவம் மிகவும் மனவேதனையை தந்தது என கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ...ட்டுத் தலைவனுக்கு பாராட்டு விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏன் மூக்கால் இரத்தம் வருகிறது?


டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்


கைக்குட்டையால் மூக்கை ஒரு கையால் பிடித்தவர் மற்றதை கைலாகு கொடுப்பது போல முன்னே நீட்டியபடி அந்தரப்பட்டு ஓடி வந்தார்.

முதலிலை பதற்றப்படாமல் உட்காருங்கோ. என்ன பிரச்சனை என வினவினேன்.

பிரசர் தலையிலை அடிச்சுப்போட்டுதோ தெரியவில்லை என்றார். அவரது கைக்குட்டை நனைந்து கிடந்தது என் கவனத்தை ஈர்த்தது. ஆனால் அதில் சளி இருந்ததே தவிர இரத்தக் கறை இருப்பதாகத் தெரியவில்லை

மூக்காலை இரத்தம் சளியோடை வருகுதோ அல்லது தனி இரத்தமா ஓடுதோ என விபரம் கேட்டேன். சீறச் சீறச் சளியோடுதான் வருகுது என்றார்.

மூக்குச் சளியோடு இரத்தம் கலந்து வருவது பெரும்பாலும் கிருமித் தொற்றால் ஏற்படுவதாகும். மூக்கின் அருகில் இருக்கும் காற்றறைகளில் தொற்று ஏற்படுவதே காரணமாயிருக்கும். இது தனி இரத்தமாக இருக்காது சளியுடன் நேர்ந்து சற்று வரும்.

### காற்றறைகள்

ஆனால் சளிப் பிரச்சினை இன்றியும் சிலநேரங்களில் மூக்கிலிருந்து இரத்தம் அதிகளவில் சிந்துவதுண்டு. இதுவே பலரையும் கிலிகொள்ளச் செய்வதாக இருக்கிறது. இரத்தம் வருவது ஒரு மூக்கிலிருந்தாக இருக்கலாம். அல்லது இரண்டிலிருந்தும் வரக் கூடும். ஒரு சில செக்கெண்டுகள் முதல் பல நிமிடங்கள் வரை மூக்கிலிருந்து குருதி வருதல் தொடரக் கூடும்.

பொதுவாகக் குழந்தைகளிலேயே அதிகம் காணக் கூடியதாக இருந்தாலும் பெரியவர்களிலும் காண முடிகிறது.

பல வயதானவர்களில் மூக்கால் வடியும் இரத்தம் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம் அவர்கள் தினசரி உட்கொள்ளும் மருந்தாக இருக்கலாம். நீரிழிவு, பிரஸர், கொலஸ்டரோல், இருத்ய நோய்கள் போன்றவை முதியவர்களிடம் அதிகமாக இப்பொழுது காணப்படுகிறது.

இதனால் மாரடைப்பு, பக்கவாதம் போன்ற பிரச்சினைகள் அவர்களுக்கு வருவதைத் தடுப்பதற்காக குருதி உறையும் வேகத்தைத் தணிக்கும் அஸ்பிரின், குளொபிடோகிறில், வோர்பரின் போன்ற மருந்துகளில் எதையாவது அவர்கள் தினசரி உட்கொள்கிறார்கள். இதனால் மூக்கால் இரத்தம் வடிய நேர்ந்தால் அது உறையாது நீண்ட நேரம் தொடரலாம்.

### என்ன செய்ய வேண்டும்

மூக்கால் இரத்தம் வடிந்தால் பதற்றப் படாதீர்கள். மூக்கை சீறிச் சிந்தாதீர்கள். தண்ணீர் அடித்துக் கழுவாதீர்கள். மூக்கைக் குடையாதீர்கள். இவை இரத்தம் வடிவதைத் தடுப்பதற்குப் பதிலாக மோசமாக்கும்.

நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். மூக்கை அழுத்திப் பிடிக்க வேண்டும். நாசித் துவாரத்துக்கும் மூக்கு எலும்பு இருக்கும் இடத்துக்கும் இடைப்பட்ட பகுதியை அழுத்திப் பிடியுங்கள்.

விட்டு விட்டுப் பார்க்காது தொடர்ச்சியாக 10 நிமிடங்களுக்கு அவ்வாறு அழுத்திப் பிடித்திருப்பது அவசியம்.

மூக்கால் குருதி வடியும்போது, படுக்கக் கூடாது. நிமிர்ந்து உட்காருங்கள். முற்புறமாக முகத்தைச் சரித்துப் பிடித்தபடி, வாயால் சுவாசித்துக் கொண்டு மூக்கை அழுத்திப் பிடியுங்கள். தொண்டைக்குள் இரத்தம் வடிந்து மூச்சுத் திணறடிப்பதை தடுப்பதற்காகவே முற்பக்கமாக சரிந்திருப்பது அவசியமாகும்.

தற்செயலாக வாயுக்குள் இரத்தம் வந்துவிட்டால் அதைத் துப்புங்கள். இல்லையேல் வாந்தியும் சேர்ந்து வரக் கூடும்.

மூக்கால் இரத்தம் வடிவது நின்ற பின்னரும் 24 மணி நேரத்திற்கு அவதானமாக இருங்கள்.

மூக்கைக் குடையாதீர்கள், தும்மாதீர்கள், மூக்கைச் சீறாதீர்கள். மூக்கினுள் இரத்தம் உறைந்து கட்டியாக இருந்தாலும் அதை அகற்ற முனையாதீர்கள். இவை மீண்டும் இரத்தம் வடிவதைத் தூண்டக் கூடும். மூக்கைச் சீறாதீர்கள்.

### எவ்வாறு ஏற்படுகிறது?


மூக்கின் உட்பகுதி இரத்த ஓட்டம் மிகுந்ததாகும். நுண்ணிய குருதிக் குழாய்கள் நிறைந்திருக்கின்றன. மூக்கைக் கிண்டுவது, துளாவுவது, மூக்குச் சீறுவது போன்றவற்றால் ஏற்படும் சிறிய காயங்கள் மூக்கிலிருந்து குருதியைச் சிந்தவைப்பதற்குப் போதுமானதாகும்.

மூக்கின் உட்பகுதியானது எப்பொழுதும் ஈரலிப்பாகவே இருக்கும். ஆனால் அது காய்ந்து வரண்டு சொரசொரப்பாக இருந்தால் சிறிய காயங்கள் ஏற்பட்டாலும் இரத்தம் வருவதற்கான வாய்ப்பு அதிகமாகும். முக்கியமாக தடிமன் சளி போன்ற கிருமித் தொற்றுகளின் போது நிகழலாம். கடுமையான குளிரின் போதும் இது நிகழலாம்.

### காரணங்கள்

மூக்கைக் குடைவது முக்கியமாக நகமுள்ள விரல்களால் குடைவது, கடுமையாச் சீறுவது போன்றவை பற்றி ஏற்கனவே சொன்னோம்.

மூக்கு வளைந்திருப்பது மற்றொரு காரணமாகும். சிலருக்கு இயற்கையாகப் பிறப்பிலும் வேறு சிலருக்கு அடிபட்ட காயங்களாலும் மூக்கின் உள்ளெலும்பு வளைந்திருப்பதால் சிறுகாயங்கள் ஏற்படுவதற்கும் இரத்தம் வடிவதற்குமான சாத்தியம் அதிகமாகும்.



தடிமன், மூக்கடைப்பு, சைனசைடிஸ் போன்ற தொற்றுகளும் காரணமாகலாம்.

தூசி, மகரந்தம் போன்றவற்றுக்கும் ஒவ்வாமை உள்ளவர்களுக்கும் வரலாம். உயர்ந்த மலை போன்ற உயரமான இடங்களுக்கு செல்லும்போது வளி அழுத்த வேறுபாடுகளாலும் ஏற்படுவதுண்டு.

மூக்கடைப்பைத் தடுப்பதற்கு கொடுக்கப்படும் சில மருந்துகளை மருத்துவ ஆலோசனை இன்றி தொடர்ந்து உபயோகிப்பதாலும் ஏற்படலாம்.

குருதி உறைதல் குறைபாட்டு நோய்கள், ஈரல் சிதைவு நோய்கள் குருதிப் புற்று நோய் போன்ற காரணங்களாலும் சில தருணங்களில் மூக்கால் இரத்தம் வடியக் கூடும்.

சாதாரணமாக இரத்தம் வடிதல் மூக்கின் முற்புறம் இருந்தே வருகிறது. ஆயினும் மூளையை நெருங்கி இருக்கும் மூக்கின் பிற்புறம் (posterior nosebleed) இருந்தும் இரத்தம் வடியக் கூடும். இது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. முக்கியமாக வயதானவர்களில் ஏற்படும். மூக்கில் அண்மையில் செய்யப்பட்ட சத்திரசிகிச்சை, கொலஸ்டரோல் பிரச்சினை போன்றவற்றல் இரத்தக் குழாய்கள் தடிப்படைதல், மிகக் கடுமையான உயர் இரத்த அழுத்தம், கட்டிகள் வளர்தல் போன்றவை காரணமாகலாம்.

### சிகிச்சை

பெரும்பாலும் சிகிச்சை எதுவும் தேவைப்படாது. தானாகவே நின்றுவிடும். தானாக நிற்காவிட்டால் ஆரம்பத்தில் சொன்ன முதலுதவி முறைகளைக் கடைப்பிடியுங்கள்.

### ஐஸ் பக் வைப்பதும் உதவலாம்.

இரத்தப் போக்கு மிகக் கடுமையாக இருந்தால் அல்லது முதலுதவி சிகிச்சைகளை செய்தபோதும் 20 - 30 நிமிடங்களுக்குள் மூக்கிலிருந்து இரத்தம் வடிவது நிற்காவிட்டால மருத்துவரைக் காணுங்கள். இரத்தப் போக்கால் உடல் வெளிறுவது, இருதயத் துடிப்பு வேகமாவது, மூச்செடுப்பதில் சிரமம் ஏற்படுவது போன்ற அறிகுறிகள் தோன்றினால் தாமதிக்காது மருத்துவரை அணுகவேண்டும்.

நோயின் தாக்கத்துக்கும் காரணத்துக்கும் ஏற்ப பலவித சிகிச்சை முறைகளை மருத்துவர்கள் கையாளக் கூடும்.

கோஸ் துணியைக் கொண்டு குருதி வடியும் மூக்கினுள் அடைத்தல் செய்யக் கூடும்.

குருதி பெருகும் இடத்தை தெளிவாகக் கண்டு பிடித்தால் இவ்விடத்தை சில்வர் நைரேட் போன்ற இரசாயனங்களால் அல்லது மின்கோலால் சுட்டு அடைக்கக் கூடும்.

இருந்தபோதும் மூக்கின் புறமிருந்து ஏற்படும் இரத்தம் வடிதலுக்கு மருத்துவ மனையில் சேர்த்து சிகிச்சை செய்ய நேரிடும்.

மருந்துகள் காரணமாயிருந்தால் மருத்துவர்கள் அவற்றின் பாவனையை மறுபரிசீலனை செய்வார்கள். முற்கூறிய அஸ்பிரின் குளொபிடகிறில் மட்டுமின்றி பெரும்பாலான வலிநிவாரணி மருந்துகளும் குருதிப்பெருக்கை தீவிரப்படுத்தக் கூடும். எனவே அவற்றை மருத்துவ ஆலோசனை இன்றிப் பயன்படுத்த வேண்டாம். இருந்தாலும் பரசிட்டமோல் மருந்து பாதுகாப்பானது.

புகைத்தல் பழக்கமானது நாசியை வரட்சி அடையச் செய்து இரத்தம் வடிவதைத் தூண்டக் கூடும் என்பதால் புகைத்தலைத் தவிருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்



## காதல் போயின்...

காதல் போயின் வாழ்வா...சாவா...?
எனக்குச் சொல்லத்
தெரியவில்லை...ஏன்
எனில் அன்று சொல்லி நின்றீர்
கண்ணிமைக்கும்
ஒவ்வொரு நொடியும்- என் நாமமும்
என் எண்ணமும் தான்
என்று..ஆனால்
இன்றோ என்னை
மறந்ததேனோ...?

ஆண்டுகள் பல கடந்தும் உம் முகம்
தெரியாமல் குரல் மட்டுமே
தினமும் என்
காதில் ரீங்காரமிட்ட வண்ணம்
உள்ளது...இதை
நீர் அறிய மாட்டீர்
ஏன் காலம் உம்மை திசை
மாற்றி விட்டது.

ஒரு முறையேனும் என்னவனை ....
பார்க்க மாட்டேனா...?
என்ற ஏக்கத்துடன் உம் பேச்சின்
நினைவுகளோடு
நிமிடங்கள்,மணித்தியாலங்கள்,நாள்கள்..
கிழமைகள்,மாதங்கள்,வருடங்கள்
என்று பலவாக...
உம் நினைவுகளோடு காத்தற்
கடவுளாய்
காத்துக் கொண்டு இருக்கிறேன்.....
என்னவன் என்னைப் பார்க்க வரும்
நாளை எண்ணி.

அன்று எம்மை நட்புக்களாக
இணையத்தின் ஊடாக...பாதை
காட்டி சேர்த்து வைச்ச
கணணி....இன்று
என்னை உம்மிடம் இருந்து பிரித்து
வைச்சு..
அல்லும் பகலும் கண்ணீரில் நீந்தச்
செய்து விட்டது.

உனக்காகவே உயிர் வாழும்
உன்னவளை இந்தப்பிறவியில்
மறந்து விட்டால்..மறு
ஜென்மம் ஒன்றிருந்தால்..அன்று
வரை நான் உன்னவள் தான் புரிந்து
கொள் என்னவனே.
காதல் போயின் வாழ்வா...?சாவா ...?

- பூரணி



## மணக்கதவுகள்

படிப்புக்கேற்ற அரசு வேலை
கைநிறைய சம்பளம்
திருமணத்திற்கேற்ற வயது
அழகு மயில்போல் பெண்
இருந்தும்....
அமையவில்லை
வரதட்சணை கேட்காத
வரன்!
இப்படி இன்னும் ஏராளம்
மனக்கனவுகளுக்குப் பஞ்சமில்லை!
சொல்லிக்கொண்டே போகலாம்,
மலர்ச்சரமாய் நீளும்
கவிதைகளால்!

- கு. லட்சுமணன்,



# நமக்கு நாமே நலம் காப்போம்

ஆரோக்கியம் என்பது சிவந்த நிறத்திலோ, கட்டுடலிலோ இல்லை. சில ஆரோக்கியமான பழக்க வழங்கங்களைத் தவறாமல் கடைப்பிடித்தாலே போதும், உடலினை உறுதி செய்து, நோயின்றி வாழலாம். நாங்கள் ஆரோக்கியமான குடும்பம் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு உங்களை நீங்களே தயார்ப்படுத்திக்கொள்ள உதவும் எளிய வழிகள் இங்கே...

### குண்டான உடல்வாகு ஆரோக்கியம் அல்ல!

குழந்தைகள் கொழுகொழுவென இருப்பது ஆரோக்கியம் என்ற பரவலான கருத்து இருக்கிறது. உண்மையில் கொழுகொழு குழந்தைகள் பலர் ஆரோக்கியமாக இருப்பது இல்லை என்பதே உண்மை. இரும்பு, விற்றமின் 'டீ' உள்ளிட்ட ஊட்டச்சத்துக் குறைபாடு குழந்தைகளிடம் அதிக அளவில் காணப்படுகிறது. பேரீச்சை, காய்ந்த திராட்சை, அத்திப்பழம், மாதுளை, நெல்லி, பப்பாளி, கொய்யா, தோடம்பழம், முருங்கை மற்றும் கீரைகளை அவசியம் அவர்களுக்குச் சாப்பிடக் கொடுக்க வேண்டும்; நன்கு விளையாட விட வேண்டும்.

### அளவுடன் பால்

குழந்தைகள், பதின்ம பருவத்தினர் மற்றும் நடுத்தர வயதினர் பால், தயிர் ஆகியவற்றை தினமும் சாப்பிடலாம். ஆனால், 40 வயதுக்கு மேற்பட்டோர் பால் (ஆடை நீக்கப்பட்டது), தயிர் ஆகியவற்றை அளவுடன் சாப்பிட வேண்டும். ஏனெனில், பால் சமிபாடைய நீண்ட நேரம் ஆகும். பித்தப் பையில் கற்கள் மற்றும் நெஞ்சுஎரிச்சல் உள்ளவர்கள் பால் பொருள்களைத் தவிர்க்க வேண்டும்.

### இருமுறை முழுக்கு

வாரத்துக்கு இரு முறையாவது முழுகுவது அவசியம். இதனால், சளி, இருமல் போன்ற தொல்லைகள் குறையும். மேலும், உடலின் வெப்பநிலை சமநிலையாகும். வாரத்தில் ஒருமுறையாவது எண்ணெய்க் குளியல் எடுப்பதைக் கட்டாயமாக்கலாம். முழுகும் போது மிதமான நீரில் முழுகலாம். குளிர்ந்த மற்றும் வெந்நீரில் குளித்தால், சருமம் வறட்சியாகலாம். ஆஸ்துமா உள்ளவர்கள் மருத்துவர் ஆலோசனையுடன் குளியல் முறையைப் பின்பற்றலாம். மூக்கின் மூலம் சுவாசிக்கும் இன்ஹேலரை, மருத்துவர் பரிந்துரைத்தால் மட்டுமே பயன்படுத்துவது நல்லது.

### சாப்பிட்ட பின் வெந்நீர்

உடல் பருமனானவர்களும் உணவில் நல்லெண்ணெய், பாதாம், தேங்காய் சேர்த்துக் கொள்ளலாம். இவை நல்ல கொழுப்பு என்பதால், உடலுக்குத் தீங்கு விளைவிக்காது. ஒவ்வொரு முறை உணவு சாப்பிட்ட பிறகும் ஒரு குவளை வெந்நீர் குடிப்பது நல்லது. இது சமிபாட்டை சீராக்கும், அளவுக்கு அதிகமான கொழுப்பைக் கரைத்துவிடும் என்பதால், சாப்பாட்டுக்குப் பின் வெந்நீர் அவசியம் தேவை.

### ஒரு குவளை பச்சைத் தேயிலைத் தேநீர்

தினமும் ஒரு முறை சர்க்கரை சேர்க்காத பச்சைத் தேயிலை தேநீர் அருந்துவது நல்லது. நெஞ்சு எரிச்சல் உருவாகும் என்பதால், வெறும் வயிற்றில் அருந்தாமல், உணவுக்குப் பிறகு இரண்டு மணி நேரம் கழித்துக் குடிக்கலாம். பச்சைத் தேயிலை தேநீரில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட் ஒவ்வொரு செல்லையும் புத்துயிர் பெறச்செய்து முதுமையைத் தாமதப்படுத்தும். மேலும், இதய நோய்கள் வராமல் தடுக்கும்.

### வெந்தயக் குடிநீர்

சர்க்கரை நோயும், வாயு தொடர்பான பிரச்சினையும் பெரும்பாலானோருக்கு உள்ளன. இரண்டாலும் பலவித உடல்நலப் பிரச்சினைகள் வருகின்றன. உருளைக்கிழங்கு, முள்ளங்கி, முட்டைகோஸ் ஆகியவற்றை வாயுத் தொல்லை இருப்பவர்கள் தவிர்க்கலாம். வெந்நீரில் வெந்தயத்தைப் போட்டு தினமும் வெந்தயக் குடிநீர் குடித்து வந்தால், வாயுத் தொல்லைகள் நீங்கும். பசி தூண்டப்படும். நெஞ்சு எரிச்சல் பிரச்சினை சரியாகும். சர்க்கரை நோயாளிகள், முதல் நாள் இரவு வெந்தயத்தை நீரில் ஊறவைத்து, மறுநாள் காலை வெறும் வயிற்றில் அந்த நீரை அருந்துவது நல்ல பலனைத் தரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசிகர்களுக்கு விருந்தளிக்குமா 'விசாரணை'



'இதுதாண்டா பொலிஸ்' என்ற கதைகளும், 'இதுவும்தாண்டா பொலிஸ்' என்ற கதைகளும் தமிழில் மட்டுமல்ல, சகல மொழிப் படங்களிலும் சகஜம்! ஆனால் அதிகாரத்தின் 'பூட்ஸ்' கால்களில் சிக்கி அநியாயமாக செத்துப் போகும் மூன்று கூலிகளின் வலியை அப்படியே மனசுக்குள் இறக்கி வைத்த வகையில் இந்த விசாரணை!

ஓட்டோ சாரதி சந்திரகுமார் தன் வாழ்வில் நடந்த இந்த சம்பவத்தை ஒரு நாவலாக எழுத, அதை பின்னணியாக கொண்டு இந்த கதையை வடித்திருக்கிறார் வெற்றிமாறன்.

Venice Film Festival Amnesty International Award உள்ளிட்ட பல்வேறு உலக திரைப்பட விழாக்களில் ஏராளமான விருதுகளை பெற்றிருக்கிறது இந்தப் படம்.

பூங்காவில் படுத்துறங்கி, பக்கத்து கிராமத்தில் வேலை பார்த்து வரும் தினேஷை பொலிஸ் அள்ளிக் கொண்டு போகிறது. கூடவே அவருடன் பூங்காவில் தஞ்சமான மேலும் மூன்று பசங்களும் பொலிஸ் நிலையத்துக்கு அள்ளி வரப்பட, பிரித்து மேய்கிறார்கள் நால்வரையும். 'ஒத்துக்கோ ஒத்துக்கோ...' என்று அடிக்கும் அவர்களிடம், 'எதை ஒத்துக்கணும்?' என்பதை கூட அறிந்து கொள்ள முடியாத அந்த அப்பாவிகளுக்கு அப்புறம்தான் தெரிகிறது, தமக்குத் திருட்டுப்பட்டம் கட்டப் போகிறார்கள் என்பது. இறுதிவரை நாங்க தப்பு செய்யல. ஏன் செய்யாத தப்பை ஒத்துக்கொள்ள வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கும் அவர்கள், கந்தலாக கிழிந்து காகிதமாக நைந்து போன பின் நீதிமன்றத்தால் விடுவிக்கப்படுகிறார்கள். விட்டாலும் விதி துரத்துமல்லவா? தங்கள் விடுதலைக்கு, போகிற போக்கில் உதவிய வேறொரு பொலிஸ் அதிகாரிக்கு உதவப்போக, அதற்கப்புறம் அவர்கள் அனுபவிக்கும் அவஸ்தைதான் மீதிப்படம்!

படம் ஆரம்பித்து முடியும் வரை, ஒரு இனம் பிரியாத பீதி தலைக்குள் இறங்கி, நெஞ்சுமேல் நடந்து, வயிற்றுக்குள் பரவி, அப்படியே கால்கள் வழியாக மெல்ல மெல்ல இறங்குகிறது.

ஒரு சிறைக்கூடம், அதற்குள் ஆடு போல அடைக்கப்பட்டிருக்கும் கைதிகள். சிறைக் கொடூரங்கள். அந்த முதல் பாதியை பார்க்கிற எவரும், பொலிஸ் நிலையத்தில் அமைந்திருக்கும் தெருவழியாக கூட செல்ல மாட்டார்கள். அதுவும் தினேஷ் வாங்குகிற அடி, அப்படியே நிஜம். விழுகிற ஒவ்வொரு லத்தி அடிக்கும் அந்த தோலும், சதையும் எம்பி எம்பி அடங்குகின்றன. இவர்



வைக்கிற காலடி கூட, அவ்வளவு உண்மையான நடிப்பு.

சிறைக்குள் இவர்கள் நடத்துகிற உண்ணாவிரதத்தை, பொலிஸ் மூளை எப்படி முறியடிக்கிறது என்பதெல்லாம் அராஜகம். அந்த நீதிமன்றத்தில் காவல் அதிகாரியை,

'யோவ்... அப்படியே திரும்பி நில்லு. சாயங்காலம் வரைக்கும் இப்படியே நிக்கணும்' என்று நீதிபதி சொல்கிற காட்சி, அவ்வளவு நேர அராஜகத்தின் மீதும் தடவப்பட்ட கருணை. தினேஷுடன் நடித்திருக்கும் முருகதாஸ் மற்றும் இரு இளைஞர்களுக்கும் பிரத்தியேகமான பாராட்டுகள்.

பிற்பாதியில் கதை இன்னொரு பரபரப்புக்குள் நுழைந்து கொள்கிறது. இது தமிழ்நாட்டு எல்லை. அதே பொலிஸ் நிலையம். அதே தினேஷ் அனுடைய நண்பர்கள் குழு. ஆனால் தெலுங்குக் காரனாவது உசிரோட விட்டான். இவனுங்க? என்ற கேள்வியை எழுப்பி, கிறுகிறுப்பாக ஒரு வணக்கத்தை போட்டு படத்தை முடிக்கிறார் வெற்றிமாறன். நாடு முழுக்க ஒரே காக்கிதான். ஆள்தான் வேறுவேறு...



வரவர சமுத்திரக்கனி, எந்த பாத்திரத்தில் நடித்தாலும் பிடிக்கிறது. மேலதிகாரியின் கட்டளைக்காக ஓடி ஓடி வேலை பார்க்கும் அவர், கடைசியில் அதே அதிகாரத்தால் மிரட்டப்பட்டு அதற்கும் கட்டுப்படுகையில், அவர்கள் கண்களில்தான் எத்தனை வேதனை?

'இல்லீங்கய்யா... நான் ஆஸ்பிடலுக்கு கூட்டிகிட்டு போவேங்கய்யா' என்று மேலதிகாரிக்கு கட்டுப்பட்டும், படாமலும் முரண்டு பிடிக்கிற காட்சியில் யாருக்கும் ஒரு சொட்டு கண்ணீர் நிச்சயம். என்னை நம்பி வந்த பசங்கய்யா என்று தினேஷ் நண்பர்களுக்காக கெஞ்சுகிற காட்சியிலும் கூட திரும்பவும் அந்த கண்ணீர்

அரசியல்வாதிகளுக்கு நட்பு வட்டத்தில் மட்டுமல்ல, அவர்களுக்கு கணக்காய்வாளராக இருந்தால் கூட எவ்வளவு சிக்கல் என்பதை துல்லியமாக்குகிறார் கிஷோர். சும்மாவே அவர் நடிப்பு விருதுக்குரியது. இதில் கட்டித் தொங்கவிட்டு காலி பண்ணுகிறார்கள். பிணமாக கிடக்கிற போது கூட, அப்படியே அதுவாக மாறியிருக்கிறார் கிஷோர். வாழ்த்துக்கள் கிஷோர்.

ஓர் அராஜகமான பொலிஸ் நிலையத்தில் சிரித்துக் கொண்டே கழுத்தறுக்கும் எஸ்.ஐ ஆக இயக்குநர் ராமதாஸ். ஓர் உயிர் போவதற்கு அவர் கொடுக்கிற அந்த தத்துவ விளக்கம், தியேட்டரை கொல்லென சிரிக்க வைக்கும். சட்டைக்கு போடுகிற கஞ்சியை சாப்பிட எடுத்துக் கொண்ட மாதிரியே எந்நேரம் விறைப்போடு நிற்கும் சரவண சுப்பையாவை, உட்கார வைத்தே பேச வைத்திருக்கிறார் வெற்றி மாறன். (விஷயம் தெரிஞ்சவராச்சே?)

வசனங்களில் ஊசியை தடவிக் கொண்டு எழுதியிருப்பார் போலிருக்கிறது. தனிக்கவனம் பெறுகிற வசனங்கள் ஒவ்வொன்றும்.

சொல்ல மறந்தாச்சு. இந்த படத்தில் கயல் ஆனந்தியும் இருக்கிறார். ஒரு சில காட்சிகள்தான். கண்ணாலேயே பேசி, அதே கண்ணாலேயே அழுது, அப்படியே கைதட்டல் வாங்கிக் கொள்கிறார். பட்... மனசில் நிற்கிற கதாபாத்திரம் அதுவும்.

கதையும் சதையுமாக இயங்கும் இந்த படத்தில், இதையும் என் பங்கா வச்சுக்கோங்க என்று அழகான பின்னணி இசையை கொடுத்திருக்கும் ஜி.வி.பிரகாஷ்குமாரும், ஒளிப்பதிவாளர் ராமலிங்கமும் தனித்துவம் மிக்கவர்கள்.

தமிழ்சினிமாவுக்கு 'பொட்டு' வைப்பது போல சிறந்த படங்களையே தருவதால், இனி இவர் வெற்றி மாறனல்ல, அந்த திலகங்களையே தாங்கும் நெற்றி' மாறன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது தெய்வீகக் காதல்?



பாரதி

சங்க கால இலக்கியங்களில் தொடங்கி சமகால திரைப்படங்கள் வரை அனைத்திலும் பேசப்பட்டது, இனியும் பேசப்பட இருப்பது, பருவ வயதில் பலருக்கு பிடித்தமானது எல்லாமே ஒன்றுதான். அதுதான் காதல்.

காதல் என்றால் என்ன? எல்லோருக்கும் காதல் வருமா? அதை உணர்வது எப்படி? எல்லாவற்றுக்கும் மேலாக தெய்வீகக் காதல் என்றால் என்ன? இதுபோன்ற எண்ணிலடங்கா கேள்விகள் நம் முன்னே எழுகின்றன.

சாதி - மத வேறுபாடுகளையும், ஏழை - பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகளையும் பார்க்காமல் தோன்றுவதுதான் காதல் என்றும், காதலுக்கு கண்ணில்லை என்றும் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இதையெல்லாம் மறுப்பதற்கில்லை. அதேவேளையில், பருவ வயதில் எதிர் பாலினத்தவர் மீது ஈர்ப்பு ஏற்படுவதும், நம் மனதுக்குள் குறுகுறுப்பான எண்ணங்கள் தோன்றுவதும் இயல்பானதே. அது கண்டிப்பாக காதல் அல்ல.

என்றைக்கு நம் வாழ்க்கையை நாமே தீர்மானிக்கும் அளவுக்கு பக்குவம் அடைகிறோமோ அன்றைக்கு நம் வாழ்க்கைத் துணையை தேர்வு செய்வதுதான் சரியான முடிவாக இருக்க முடியும். அது என்ன பக்குவம்? அது எந்த வயதில் வரும்? என்ற கேள்விகள் எழலாம்.

ஒரு குடும்பத்தை வழிநடத்திச் செல்ல தந்தையும், தாயும் செய்யும் காரியங்களை என்றைக்கு நாம் சுயமாக செய்யத் தொடங்குகிறோமோ அன்றைக்கு நாம் பக்குவம் அடைந்திருப்பதை உணர முடியும். அது எந்த வயதினருக்கும், எப்போது வேண்டுமானாலும் வரலாம்.

அப்படியொரு தருணத்தில் நம் மனதுக்குள் காதல் தோன்றினால் நிச்சயம் ஒரு தெளிவான முடிவை எடுப்பவராக இருப்போம். நம் மனதைக் கவர்ந்த எதிர் பாலினத்தவர் நமக்கும், நமது குடும்ப வாழ்க்கைச் சூழலுக்கும் சரியான தேர்வாக அமைவார்களா என்பதை மனம் சிந்திக்கும்.

ஆம் எனில், நாயகன் அல்லது நாயகியை திருமணம் செய்வதில் சாதி, மத, பொருளாதார ரீதியாகத் தடை ஏற்படுமா? அப்படி இல்லாவிட்டாலும் யாரேனும் ஒருவரது குடும்பத்தில் தீவிர எதிர்ப்பு இருக்குமா? என்பதை நம் மனம் கணக்கீடு செய்துவிடும்.

அதன் பின்னர், பிரச்சினைகள் எதுவும் வேண்டாம் என தொடக்கத்திலேயே ஒதுங்குவது அல்லது தடைகளைத் தாண்டி திருமணம் செய்வது என்ற தெளிவான முடிவை எடுப்பவராக நாம் இருப்போம். இரண்டில் எது நடப்பினும் நன்மையே.

ஆனால், இதுபோன்ற தெளிவான சிந்தனைகள் எதுவுமே இல்லாமல் நடை, உடை, பாவனை என அழகியலை மட்டுமே பார்த்து உருவாகும் குறுகுறுப்பான எண்ணம் வெறும் பாலின ஈர்ப்பாக மட்டுமே அமையும்.

ஆச்சரியம் என்னவெனில் இந்தக் காதலில்(?) ஒருவர் மீது ஒருவர் மிக இறுக்கமான அன்பு வைத்திருப்பதாக நம் மனம் நினைத்துக் கொள்ளும். ஆனால், கடற்கரை, பூங்கா, திரையரங்கு என சுற்றித் திரிந்து பாலின ஈர்ப்புக்கான தேவைகள் முடிந்தவுடன் இந்தக் காதல் காணாமல் போய்விடும்.

சில சமயங்களில், இதில் யாரேனும் ஒருவரின் காதல் உண்மையாக இருக்கலாம். ஆனால், அவர்களுக்குப் பிடித்தமான ஆணோ அல்லது பெண்ணோ தவறான தேர்வாக இருப்பார்கள்.

நான் ஓர் ஏழையைக் காதலிக்கிறேன் என்று கூறுவது ஒரு பெண்ணின் பெருந்தன்மையாக இருக்கலாம். ஆனால், வாழ்வில் எவ்வித இலக்குமின்றி ஊதாரியாய் சுற்றித் திரிபவரைக் காதலிக்கிறேன் என்று கூறினால் அதை சரியென ஏற்க முடியுமா?

இதேபோல், எளிமையான குடும்பத்தைச் சேர்ந்த ஓர் ஆண், குடும்பத்தை வழி நடத்தும் திறன் ஏதும் இல்லாமல் ஆடம்பர வாழ்வை விரும்பும் பெண்ணைக் காதலிக்கிறேன் என்று கூறுவதும் ஏற்புடையதாக இருக்காது.

இது எல்லாவற்றையும் மீறி இப்படியொரு வாழ்க்கைத் துணையின் (ஆண் / பெண்) கரம் பற்றும்போது அந்தத் திருமணம் கசப்பானதாக மாறுகிறது. ஏனெனில், காதலிக்கும் போது கண்ணே, மணியே, முத்தே என கொஞ்சியதைப் போல எதார்த்த வாழ்வு அமைவதில்லை.

எல்லாம் சரிதான், பக்குவம் அடைந்ததோ அல்லது துடிப்புமிக்கதோ எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். காதல் என்பது தானாக இணைபவர் களுக்கு மட்டுமே சொந்தம் எனக் கூறுவது சரிதானா? நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் இணைபவர்கள் காதலிக்கும் வாய்ப்பை பெறாதவர்களா என்ன? கண்டிப்பாக அப்படியொன்றும் இல்லை.

காதல் திருமணம், நிச்சயிக்கப்பட்ட திருமணம் எதுவாக இருப்பினும் ஓர் ஆணுடன், பெண் கைகோர்த்து குடும்ப வாழ்வில் அடியெடுத்து வைக்கும் போதுதான் உண்மைக் காதலுக்கான கதவுகள் திறக்கின்றன.

அப்படிப் பார்த்தால் திருமணத்துக்கு முன்பு அல்லது அதற்குப் பிறகு என ஏதேனும் ஒரு சூழலில் அனைவருக்குமே காதலிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால், இதில் எத்தனை பேர் தெய்வீகக் காதலுடன் வாழுகின்றனர்? முதலில், தெய்வீகக் காதல் என்றால் என்ன? இந்தக் கேள்விக்கு விடை காண்பது அவசியம்.


ஆனால், கடலில் சங்கமிப்பது இயற்கையின் நியதிதானே தவிர நதிகளின் நோக்கம் அதுவல்ல. எத்தனை முறை வறட்சி ஏற்பட்டாலும் மீண்டும், மீண்டும் நீரை சுரக்கச் செய்து காடு, பள்ளம், மலை முகடுகளைத் தாண்டிச் சென்று மண்ணை வளமாக்குவது தான் நதிகளின் நோக்கம்.

இதைப் போலவே, நம் வாழ்விலும் எத்தனை எத்தனை ஏற்றத் தாழ்வுகளை வேண்டுமானாலும் சந்திக்க நேரிடலாம். எண்ணற்ற சண்டை சச்சரவுகள் வரலாம். ஆனால், மீண்டும், மீண்டும் நம்மில் அன்பு சுரப்பதுடன், அது நதி நீரைப் போலவே தூய்மையானதாக இருக்குமென்றால் அந்த வாழ்க்கை இனிமையானதாக இருக்கும்.

நம் சதைகள் இளமையுடன் இருக்கும்போது கைகோர்த்து நடப்பதல்ல காதல். அறுபது, எழுபது வயதுகளைத் தாண்டி முதுமையை எட்டிய நிலையில், கைகோர்த்து நடந்து செல்ல நம் மனம் விரும்புமென்றால் அதுதான் தெய்வீகக் காதல்.

வாழ்வின் அனைத்து தருணத்திலும் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி வாழ்ந்தால் மட்டுமே எந்தவொரு தம்பதியும் தெய்வீகக் காதலை அடைவது சாத்தியம்.

## காதல்



நீ கண்ணாடி முன்
அடிக்கடி நிற்பாய் ...!
அறை பூட்டிவிட்டு
தனியே கதைப்பாய் ..!
பொருத்தமில்லாத
பொருளை பார்த்து சிரிப்பாய் ..!
பிறருக்கு பொருத்தமில்லாத
விடை கொடுப்பாய் ..!

ஜன்னலோரம்
அமாவாசை
இரவில் நின்று தேடுவாய் ..!
ஏன்? சிரிக்கிறாய்ஏன் ?
அழுகிறாய் என்று
தெரியாமல் செய்வாய் ..!
வெறும் கோப்பையில்
சோறு உண்பாய் ..!

உன் கடைசி தம்பி
உன்னை கண்டு சிரிப்பான்...!
உன்நண்பிகளுக்கு
கேலிப் பொரு ளாவாய்..!
அம்மவின் திட்டு
அர்ச்சனையாக கேட்கும் ..!
மன்னித்து விடு
அன்பே இத்தனைக்கும்
நான் தான் காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி மாதம் பிறந்ததுமே சட்டென்று நினைவுக்கு வருவது காதலர் தினம்தான். காதலிக்கு பரிசு வாங்கவும், காதலை வெளிப்படுத்தவும் இதை ஒரு சந்தர்ப்பமாக இளைஞர்கள் பலர் பயன் படுத்திக் கொள்கின்றனர். லூப்பர்காலியா என்ற திருவிழாவை ரோமானியர்கள்

பாதிரியார் வலண்டைன், அரசனின் இந்த அறிவிப்பை மீறி இரகசியமாகத் திருமணங்களை நடத்தி வைத்தார்.

**காதலிக்கு அனுப்பிய முதல் வாழ்த்து:**

இதையறிந்த மன்னன் வலண்டைனை கைது செய்து சிறையில் அடைத்தான்.



# காதலர் தினம் எப்படி வந்தது : உங்களுக்கு தெரியுமா ?

கொண்டாடி வந்தனர்.

பிப்ரவரி 14ம் தேதி மத்திய இங்கிலாந்தில் பறவைகள் மூலம் ஜோடிகளைத் தேர்வு செய்த ஆங்கிலேய பழமைவாதிகளின் இந்த நாளையே காதலர் தினமாக கொண்டாடுவதாக சிலர் கூறுகின்றனர். இருப்பினும், ரோமானிய அரசனின் ஆட்சிக் காலத்தில்தான் காதலர் தின கொண்டாட்டம் துவங்கியதற் கான சான்றுகள் உள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கிளாடிஸ் மிமி ஆட்சி புரிந்த போது, தனது படைவீரர்களுக்கு முட்டாள் தனமாக உத்தரவு பிறப்பிப்பானாம். இந்த அரசனின் நடவடிக்கையால் படையில் சேர பலர் தயங்கினர். திடீரென ஒருநாள் அவன் அமைச்சர்களை அழைத்தான். ரோமாபுரி நாட்டில் இனி எவருமே திரு மணம் செய்து கொள்ளக்கூடாது என்று உடனே ஓர் அறிவிப்பு செய்யுங்கள்.

ஏற்கனவே நிச்சயித்த திரு மணங்களும் ரத்து செய்யப்படு கிறது. இதை மீறுபவர்கள் கைது செய்யப்பட்டு இருட்டுச் சிறையில் அடைக்கப்படுவார்கள். பின்னர் பொது இடத்தில் அவர்கள் கல்லால் அடித்து தலை துண்டித்து கொல்லப்படுவார்கள்" என்றானாம்.

இதை கேட்ட ரோமானியர்கள் அதிர்ச்சிக்கு ஆளாகினர். திருமணமானவர்கள் மனைவியை பிரிந்து வரத் தயங்குகிறார்கள். காதலிக்கும் வாலிபர்கள் காதலியை பிரிந்து வர தயங்குகின்றனர். இது இரண்டும் இல்லாவிட்டால் படையில் சேர்வார்கள் என்று அவன் நினைத்துள்ளான்.

மரணதண்டனையை நிறைவேற்ற நாளும் நிர்ணயிக்கப்பட்டது.

இடைப்பட்ட காலத்தில் சிறையில் இருந்த பாதிரியார் வாலண்டைனுக்கும் சிறைக் காவலர் தலைவனின் பார்வை இழந்த மகள் அஸ்டோரியசுக்கும் காதல் மலர்ந்துள்ளது. வலண்டைனை விடுவிக்க அஸ்டோரியஸ் முயன்றாள். இதை அறிந்த சிறைத் துறைத் தலைவன் மகளை வீட்டுச் சிறையில் வைத்தான். அனைத்து காவலையும் மீறி காகித அட்டை ஒன்றின் மூலம் செய்தி அனுப்பினார் வலண்டைன்.

இந்த வரலாறு உண்மையாக இருக்குமானால், முதல் காதலர் வாழ்த்து இதுவாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

இந்த கடிதத்தை படிக்கும் அதே நேரத்தில் வாலண்டைன் கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்த பின் வலண்டைனின் தலை துண்டிக்கப்பட்டது. அந்த நாள் 270 ஆவது வருடம் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி. வலண்டைன் ரோம் மக்களின் மனங்களில் மறையாமல் நிறைந்திருந்தார்.

ரோமானிய சேர்ச்சுகள் ஐரோப்பியரின் கட்டுப்பாட்டுக் குள் வந்த போது பாகான் விடுமுறை தினம் அறிவிக்கப்பட்டது. இதுவே வலண்டைன் தினமாகக் கொண்டாடப்பட்டது. சுமார் 200 ஆண்டுகளுக்கு பிறகு போப்பாண்டவர் ஜெலாசியஸ் மி வலண்டைனை புனிதராக அறிவித்தார். அன்றிலிருந்து வலண்டைன் தினம் காதலர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

என் பொண்டாட்டியைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை...' என்று அலுத்துக்கொள்ளும் ஆண்கள் அனேகம். அது ஒன்றும் அலிபாபா மந்திரமல்ல. இன்றைய 'நவீன யுக மனைவி'யின் அன்பைப் பெற 10 விதிகள்...

**1. மதியுங்கள்**

வீட்டு வேலை தவிர தங்களால் நிறைய விஷயங்கள் முடியும் என்று பெண்கள் நிரூபித்து நீண்டநாள்களாகி விட்டன. எனவே மனைவியை அவரது திறமைக்காக மதியுங்கள். புதிய விஷயங்களைச் சாதிப்பதற்கு ஊக்குவியுங்கள்.

**2. கனவுகளைப் பின்பற்றட்டும், உங்களை அல்ல**

இன்றைய பெண்கள் இலக்கு சார்ந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு ஓர் இலட்சியம் இருக்கிறது, ஒரு கனவு இருக்கிறது. உங்களுக்காக அவர்கள் தங்கள் கனவுகளை விட்டுவிட வேண்டும் என்று வற்புறுத்தாதீர்கள்.

**3. எல்லை தாண்டிச் சிந்தியுங்கள்**

மனைவியை சமாதானப்படுத்துவதற்கான பழைய விதிகள் எல்லாம் காலாவதியாகிவிட்டன. புதிய யோசனைகளில், சோதனை முயற்சிகளில் ஈடுபடத் தயங்காதீர்கள். மனைவிக்குத் திடீர் ஆச்சரியம் கொடுக்கும் வழக்கத்தைக் கைவிடாதீர்கள்.

**4. உணர்வுகளை வெளிப்படுத்துங்கள்**

'ஆண்கள் அழ மாட்டார்கள்' என்பது சரிதான். உணர்வுகளை வெளிப்படுத்தும் உணர்வுப்பூர்வமான ஆண்களையே பெண்கள் விரும்புகிறார்கள் என்பதே உண்மை. ஆனால் எதற்கெடுத்தாலும் கண்ணைக் கசக்காதீர்கள். அழுமூஞ்சி ஆண்களை பெண்களுக்கு பிடிக்கவே பிடிக்காது.

**5. ஆலோசனை கேளுங்கள்**

நீங்கள் ஒரு முடிவெடுக்கும்போது உங்கள் மனைவியின்



# மனைவியின் அன்பைப் பெற...

ஆலோசனையையும் கேளுங்கள். அது பணத்தைப் பற்றியதாக இருக்கலாம், வேலை, தொழிலைப் பற்றியதாக இருக்கலாம். மனைவியின் கருத்தைக் கேளுங்கள், அதற்கு மதிப்புக் கொடுங்கள்.

**6. சமைக்கத் தெரிந்து கொள்ளுங்கள்**

நேசத்தில் மட்டுமல்ல, சமையலிலும் கெட்டிக்காரராக இருக்கும் கணவரை மனைவிக்குப் பிடிக்கும். அப்படிப்பட்ட கணவர்தான் அவர்களைப் பொறுத்தவரை 'முழுமையானவர்'.

**7. பேசுங்கள்**

பேசுவது பெண்களுக்குப் பிடிக்கும் என்று தெரியும். மனைவியுடன் வழக்கமான விஷயங்களை மட்டுமல்லாமல், அரசியல், பொருளாதாரம், இலக்கியம் என்று பல விஷயங்களைப் பற்றியும் பேசுங்கள். உங்களின் எதிர்காலத் திட்டங்கள், கனவுகள், பயங்கள் என்று எல்லாவற்றைப் பற்றியுமே பகிர்ந்துகொள்ளுங்கள்.

**8. மனைவியின் குடும்பத்தில் 'பங்கு கொள்ளுங்கள்'**

வீட்டுக்கு வருகிற மனைவி உங்கள் குடும்பத்தோடு ஒன்றிப்போய்விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். அப்படி நீங்களும் ஒரு அன்பான மருமகனாக மனைவியின் வீட்டில் அக்கறை காட்டுவது அவசியம்.

**9. அழகில் கவனம் செலுத்துங்கள்**

அழகு, பெண்கள் மட்டும் சம்பந்தப்பட்ட விஷயம் என்று யார் சொன்னது? வெளியிடங்களுக்குப் போகும்போது உங்கள் மனைவியை வியப்பாக நான்கு பேர் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அப்படி அவரும் எதிர்பார்ப்பது நியாயம்தானே?

**10. அவ்வப்போது 'வழக்கம்போல்' இருங்கள்**

எல்லாவற்றிலும் புதுமையாக இருக்க வேண்டும் என்பதில்லை. அவ்வப்போது, 'நீதான் எனக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிஷம்' என்று 'பழைய டயலாக்' பேசுவதில் தவறில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார இராசி பலன்

**10.02.2016 –16.02.2016**

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

நீண்ட நாள் முயற்சி கூட இனிதே நிறைவேறும். பண வரவு பன்மடங்கு அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு சிறப்பாக நடந்தேறும். உடன்பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் அன்பு கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், வருமானமும் அதிகரிக்கும். பணியாளர்கள் திறம்பட பணிபுரிந்து, நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்களுக்கு ஞாபகத்திறன் மேம்படும்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்**

வாழ்க்கை முன்னேற்றப் பாதையில் செல்லும். வாகனத்தின் பயன்பாட்டால் இனிமை காண்பீர்கள். உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். புத்திரரை வழி நடத்துவதில் மென்மையான அணுகுமுறை தேவை. ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் ஆலோசனையை ஏற்பதால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணிய ாளர்கள் கடமை உணர்ந்து செயல்படுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மா ணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவர்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்**

ஆரோக்கியம் மேம்படும். அக்கம் பக்கத்தினரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும். பூர்வீக சொத்து மூலம் வருமானம் உண்டாகும். எதிரியால் இருந்த தொல்லை மறையும். மனைவியின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் ஆதரவு கிடைக்கும். லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணியை விரைந்து முடிப்பர். பெண்கள் பணம், நகை பாதுகாப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். பசு, பால் பாக்ய யோகத்தால் நன்மை காண்பீர்கள். வாகன பயணத்தால் இனிய அனுபவம் ஏற்படும். புத்திரர்கள் உங்களுடன் கருத்து வேறுபாடு கொள்ள வாய்ப்புண்டு. கடன் பிரச்சினை ஏற்படலாம். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை. வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். பிள்ளைகள் உங்களின் கருத்துக்கு மதிப்பு கொடுப்பர். வழக்கு விஷயத்தில் முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. கணவன், மனைவி ஒற்றுமையுடன் செயல்படுவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை உடனடியாக சரி செய்யவும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வர். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தை கடைபிடிப்பர்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்**

வாகன வகையில் பராமரிப்பு செலவு ஏற்படும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வழக்கில் வெற்றி கிடைக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள் நண்பர்களுடன் பொழுதுபோக்கில் ஈடுபடுவர்.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.**

மனதில் உற்சாகம் பிறக்கும். பேச்சிலும், செயலிலும் நிதானம் வெளிப்படும். வீடு, வாகன வகையில் கூடுதல் பாதுகாப்பு தேவை. புத்திரரின் எதிர்கால வளர்ச்சிக்கு துணைபுரிவீர்கள். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். மனைவியால் குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் லாபம் காண்பீர்கள். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் திறமையை வளர்த்துக் கொள்வர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

புத்திரர்களின் வளர்ச்சி கண்டு பெருமை உண்டாகும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் மனதில் உங்கள் மீதான நல்ல எண்ணத்திற்கு குறை வராமல் பாதுகாக்கவும். அரசு வகையில் உதவி கிடைக்க வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்தி ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை மதித்து நடக்கவும். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் நண்பரோடு சேர்ந்து படிப்பர்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

முக்கியஸ்தர்களின் அறிமுகம் கிடைக்கும். புதிதாக வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். உடன் பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். புத்திரர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவீர்கள். எதிரி தொல்லை மறையும். மனைவியுடன் இருந்த மோதல் போக்கு மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

### மகரம்

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.**

மகளின் ஜாதக யோக பலனால் நன்மை ஏற்படும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பை செய்வது நல்லது. உடல் நலனுக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழிலில் புதிய உத்தி மூலம் வருமானத்தைப் பெருக்குவீர்கள். பணியாளர் கடமையை உணர்ந்து சிறப்பாக பணிபுரிவர். பெண்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்தவும். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம்.

### கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.**

இடையூறு செய்தவர் விலகிப் போகும் சூழல் உருவாகும். சுப விஷயத்தில் இருந்த தடை நீங்கும். உடன்பிறந்தவர்களின் ஆதரவால் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவர்களுக்கு இடம் தர வேண்டாம். மனைவியிடம் வாக்குவாதம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவர். பெண்கள் பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வர். மாணவர்களுக்கு நட்பு விஷயத்தில் கவனம் தேவை.

### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயல்பாடு நன்மைக்கு வழிவகுக்கும். ஆரோக்கிய விஷயத்தில் அக்கறை உண்டாகும். மனைவியின் ஆலோசனையை பரிசீலிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைக்கவும்.

## சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

**விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 123**



வாளிகளில் இரத்தம் ஊறிய பஞ்சுப் பொதிகள். எண்ணற்ற அறுவை சிகிச்சைகள் நடந்ததற்கு கையுறைகள், அடுத்த ஆட்டத்துக்காக உலர்த்தி வைத்த நிலையில் இருந்தன. அன்று மாலை நடந்ததை நினைத்தால் ஆத்திரம் தான் வரும். சூதுவாதற்ற மக்கள் மீது இத்தகைய குரூரக் கொடுமையைப் புரிந்து விட்டு அதற்கு நியாயம் கற்பிக்க முயலும் மனித சிந்தனை மனச்சாட்சியற்றதாகவே இருக்க முடியும். பாதிக்கப்பட்டவர்கள் இவர் இவரென்று தெரிந்தெடுக்கப்படாது சகட்டு மேனிக்கு தாக்கப்பட்டவர்கள். எவரும் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பதை உணர்ந்த போது நான் உயிர் தப்பியதற்கு பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்ற உணர்வைத் தந்தது. அன்று பாதிக்கப்பட்டவர்களை விட நான் எதிலும் வேறுபட்டவளல்ல என்பதும், இப்படியான சந்தர்ப்பங்களில் நான் பிரித்தெடுத்துக் காப்பாற்றப்பட்ட இடமே இல்லை என்பதையும் உணர்ந்தேன். நான் மட்டும் எப்படிக் காப்பற்றப்படலாம்? பிழையான நேரத்தில் பிழையான இடத்தில் நான் இருக்கவில்லை என்பதால் தப்பிப்பிழைத்தது எனது அதிர்ஷ்டம்! ஆனாலும் இந்த மக்களின் அவலத்தையும் துயரத்தையும் நேரே பார்க்கும் போது , நடந்து கொண்டிருக்கும் கொடுமையின் தன்மையைச் சிந்திக்க முடிந்தது. ஒரு அந்நிய ஆக்கிரமிப்பின் அரக்கத்தனமான ஒடுக்குமுறைக்கும் பயங்கரத்துக்கும் குறிப்பிட்ட இந்த இன மக்களே உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் உணர முடிந்தது. என்னைப் பொறுத்த வரையிலே தமிழ் மக்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட கொடூரமும் , பேரழிவும் அவர்கள் தாங்கள் எதிர்காலத்தைத் தாமே நிர்ணயிக்கும் அரசியல் உரிமை பெற முழுமையான அருகதை உடையவர்களாக்கப் போதுமானவை என்றே கூறுவேன்.

இந்தியப் படைகள், வலிகாமத்தில் பலமாகக் காலூன்றிக் கொண்டு, வடக்கே வடமராட்சியிலும் தெற்கே தென்மராட்சியில் உள்ள சாவகச்சேரியிலும் தங்கள் இராணுவ நடவடிக்கையை நடத்தி விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைப் பறித்தெடுக்க களம் குறித்தார்கள். சாவகச்சேரியே முதலில் இந்தியப் படைகளிடம் வீழ்ந்தது. கண்மூடித்தனமாக பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். தமிழ்ப் பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டார்கள். தமிழ்மக்களின் சொத்துக்களும், உடைமைகளும் சூறையாடப்பட்டன. இவையெல்லாம் அந்தப்பகுதிகளில் தேடுதல் நடத்தி அழிக்கும் நடவடிக்கைகள் என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்டன. இவையெல்லாம் பதிவேடுகளில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

தேசியப் போராட்ட காலங்களில் ஒப்பற்ற தீரமும் அர்ப்பணிப்பும் நிறைந்த தனித்துவமான நீண்ட வ்ரலாறு கொண்டவர்களே சாவகச்சேரி மக்களாவார். பெருந்தொகை விடுதலைப்புலிப் போராளிகளையும் அநேகம் மாவீரர்களையும் வழங்கிய தாய்மண் அது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கத்துக்கு எலி உதவ முடியுமா?

தூங்கிக் கொண்டிருந்த ஒரு சிங்கத்தின் மேல் ஒரு எலி விளையாடிக் கொண்டிருந்தது. திடீரென்று விழித்துக் கொண்ட சிங்கம் தன் மேல் விளையாடிக் கொண்டிருந்த எலியைப் பிடித்துத் தின்னப் போயிற்று. 'தூங்கிக் கொண்டிருக்கும் என்னை இடையூறு செய்கிறாயா? இதோ உன்னைத் தின்னப் போகிறேன்' என்று சொல்லிற்று.

இதைக் கேட்டுப் பயந்து போன எலி, 'காட்டு அரசே! நான் விளையாட்டுத் தனமாக தங்கள் மேல் ஏறி விளையாடி விட்டேன். இன்று என்னை மன்னித்து உயிருடன் விட்டுவிடுங்கள். நான் என்றும் இந்த நன்றியை மறக்க மாட்டேன்' என்றது. எலியின் கெஞ்சலில் மனமிரங்கிய சிங்கம் அதை எச்சரித்து உயிருடன் விட்டது.

ஒன்றிரண்டு மாதங்கள் சென்றிருக்கும். ஒரு நாள் சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. அது சாதாரணமானதாகத் தோன்ற வில்லை. சிங்கத்தின் வேதனை கலந்ததாக இருந்தது.

சிங்கத்தின் வேதனை கலந்த கர்ஜனையைக் கேட்ட எலி என்னவென்று அறிந்து கொள்வதற்காக கர்ஜனை கேட்ட திசையை நோக்கிப் போனது.

அங்கு சில வேடர்கள் வலை விரித்து சிங்கத்தைப் பிடித் திருந்தனர். வலையில் மாட்டிக் கொண்ட சிங்கத்தை அங் கிருந்த மரத்தில் கட்டி வைத்துவிட்டு, அதை அரசனிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக ஒரு வண்டியை எடுத்து வரச் சென்றனர்.

அவர்கள் அங்கிருந்து சென்ற பின்பு எலி சிங்கத்திடம் சென்று, 'அரசே! அன்று எனக்கு உயிர்ப்பிச்சை அளித்த தங்களை எப்படியாவது காப்பாற்றி விடுவேன்' என்றது. இதைக் கேட்ட சிங்கம் எலியைப் பார்த்து, 'மிகவும் அற்பமான நீ என்னை எப்படிக் காப்பாற்ற முடியும்?' என்று கேட்டது.

உடனே எலி, அப்படிச் சொல்லாதீர்கள் அரசே! சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்று சொல்வார்கள். நான் உங்களைக் காப்பாற்றுகிறேன் என்றபடி சிங்கத்தைச் சுற்றியிருந்த வலையைத் தன் பற்களால் கடித்துத் துண்டிக்கத் தொடங்கியது.

சிங்கம் வலையை விட்டு வெளியில் வந்தது. எலியைப் பார்த்து நன்றி சொன்ன சிங்கம், எலியே, நான் உன்னைச் சாதாரணமாக நினைத்து விட்டேன். நீ இனி எப்போது வேண்டுமானாலும் என்னிடம் வந்து விளையாடலாம் என்று சொல்லி அங்கிருந்து நகர்ந்தது.

- சித்ரா



# பருந்தாரே பருந்தாரே

அகல விரித்த சிறகோடு
அழகாய் பறக்கும் பருந்தாரே
சுகமாய் வானில் வட்டமிடும்
செய்தி என்ன சொல்வீரா?



கோழிக் குஞ்சைக் கண்டீரா?
கீச்சிடும் ஒலியை ரசித்தீரா?
கோலச் சொண்டுள் உமிழ்நீரா?
கொத்திச் சுவைக்க நினைத்தீரா?

பாவம் சின்னக் குஞ்சுகளாம்
பறக்க முடியாப் பஞ்சுகளாம்
சேவல் காவல் செய்கிறதாம்
சின்னக் குஞ்சுகள் நடுங்கிறதாம்



தூக்கிடும் ஆசை கொள்ளாதீர்
துடிக்கும் குஞ்சுகள் கொல்லாதீர்
தாக்கியே உயிர்களை
அழிப்பதெல்லாம்
தப்பாம் உமக்குத் தெரியாதோ?
முற்றம் நிறைந்த மரமுண்டு...
முற்றிப் பழுத்த கனிகளுண்டு...
உற்றுக் கொத்தி உண்ணலாம் வா!
உறவு கொண்டு மகிழலாம் வா!!

- கிண்ணியா எஸ்.பாயிஸா அலி

இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்







# சிறுவர் உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதிலி

# நீ அழகு தான்... மாளவிகா!

சிறுகதை

மாளவிகா! இவள் ஒரு இளம் பெண்..... பெயர் மட்டும் தான் அழாகாய் இருக்கிறது ! நான் தான் அழகா இல்லை என்று அவள் பல முறை மனதுக்குள் நொந்தது உண்டு.... அவளுக்கு வயது இருபத்தியி ரண்டு... இந்த வயதில் எல் லாப் பெண்களுமே தாம் அழ காய் இருக்க வேண்டும் என்பதில் முழுக் கவனம் செலுத்து வர்... இது இயற்கை....

அவளுக்கு ஒன்றும் அங்க வீனம் ஒன்றும் இல்லை... எல்லோர் முகத்துக்கும் ஓர் அழகு உண்டு.... எல்லாம் அவரவர் பார்க்கும் பார்வையில் உள்ளது...

"என்ன செய்யிறீங்கள் மாள விகா?" அம்மா குரல் கேட்டு கை யில் எடுத்த முக பவுடரை அப் படியே வைத்து விட்டு சமையல் அறைக்கு சென்றாள்...

"ஏய் !! இந்த வெண்டைக் காயை வெட்டு.... எப்ப பார்த்தாலும் கண் ணாடி முன்னாலே என்ன வேலை உனக்கு?" கொஞ்சம் கோபமாத்தான் சொன்னாள் அம் மா.. மாளவிகாவின் புலம்பல் அம்மாவுக்கு பிடிப்பதில்லை.. எப் போதும் நீ என்னை ஏன் இப்படி அழகில்லாமல் பெத்தாய்? என்று கூறிக்கொண்டிருந்தால் அம்மா என்ன செய்வாள்? அம்மா சிறு வயது முதலே இவளுக்கு நிறையச் சொல்லி விட்டாள்.. "இதோ பார் மாளவிகா! நீ அழகாதான் இருக் கிறாய்? ஏன் கவலைப் படுகிறாய்... பார் ராஜா மாதிரி மாப்பிள்ளை வருவான் உனக்கு" என்பாள்...

அம்மா சொல்லச் , சொல்ல வெறுப் புத் தான் வரும் இவளுக்கு.... கறுப்பாக இருந்தாலும் ஒரு களை வேண்டும் என்பது இவளின் வாதம்...எனக்கே என்னை பார்க்க பிடிக்கேல்லை... அப்போ வேறு யார் என்னைப் பார்ப்பினம்?

இவள் குடும்பம் ஒன்றும் பெரிய வசதி இல் லை... அப்பா ஓர் அரசு ஊழியர்... வரும் சம்பளத்தில் குடும்பம் நடத்தத் தெரிந்தவள் அம்மா. இவளு க்கோ வேலைக்கு செல்ல விருப்பமே இல்லை... அழகே அதற்குக் காரணம்....

நலைந்து பேர் பெண் பார்த்து விட்டுச் சென்றனர்... இவள் எதிர் பார்த்த மாதிரியே ஏதோ ஒரு காரணம் கூறி தட்டி கழித்தனர் மாப்பிள்ளை வீட்டார்...

இதோ, நாளை மறுநாள் ஆகாஷ் இவளை பெண் பார்க்க வருவதாக தரகர் சொன்னார்.... இவள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இருந் தாள்... ஆனால் அம்மாவோ இந்த மாப்பிள்ளையாவது சரி சொல்ல வேண்டும் என்று அப்பாவிடம் கூறிக் கொண்டிருந்ததை கேட்டாள் இவள்... சிரிப்பதை தவிர வேறொ ன்றும் தோன்றவில்லை மாளவி காவுக்கு....



நான் அழகு என்று நினைத்து கண்ணா டியில் உன் முகத்தைப் பாரு... அதன் அழகை நீ ரசிப்பாய்.... !" என்றான் மிகவும் அழகாக.... ஆச்சரியப்பட்டாள் மாளவிகா! என்ன நான் அழகா! அதுவும் ஒரு பிரபலமாக உள்ள ஒருவர் என்னை பார் த்து.... வெட்கத்தில் முதன் முதலாய் தலை குனிந்தாள்...

ஆகாஷ்! தனியார் கம்பனியில் நல்ல வேலை... ஒரு தம்பி... அவன் படித் துக்கொண்டி ருக்கிறான்... அப்பா ஓய்வு பெற்ற அரச வேலையாளர்... மாப்பிள்ளை . பெண்ணிடம் பேசவேண்டும் என்றான்... இருவரும் மொட்டை மாடியில் சந்தித்தனர்.... மாளவிகா தலை குனிந்து தான் இருந்தாள்... அவளுக்கு தாழ்வு மனப்பான்மை....

"எனக்கு உன்னை பார்த்ததுமே பிடித்து விட்டது.... நீ நடந்து வந்த விதம்... என் அம்மா விடம் பேசிய பாங்கு எல்லாம் என்னை நெகிழ வைத்தது.... உன்னால் என் குடும்பத்தை கட்டிக் காக்க முடியும் என நான் நம்புகிறேன்.. உன் விருப்பம் என்ன?" சற்றும் தயங்காமல் கேட்டான் ஆகாஷ்...

"நான் அழகா இல்லை... உங்களுக்கு பொருத்தமா இருக்கமாட்டேன்..." என்றாள் தயக்கக் குரலில்.... அவளின் குரல் இனிமையாக ஒலித்தது ஆகாஷிற்கு....

"யார் சொன்னது நீ அழகில்லை என்று? என் மனைவி எப்படி இருக்க வேண்டும் என நான் மனதில் கற்பனை செய்திருந்தேனோ அப்படி இருக்கிறாய்.... உன் முகம்?? அதை நீ சம்மதித்தவுடன் நான் இன்னும் மெருகேற்றுகிறேன் பார்... அழகு நம் மனதில் இருக்கிறது... பார்க்கும் பார்வையில் இருக்கிறது.... அவ்வளவு தான்..... நான் அழகு என்று நினைத்து கண்ணாடியில் உன் முகத்தைப் பாரு... அதன் அழகை நீ ரசிப்பாய்.... !" என்றான் மிகவும் அழகாக.... ஆச்சரியப் பட்டாள் மாளவிகா! என்ன நான் அழகா! அதுவும் ஒரு பிரபலமாக உள்ள ஒருவர் என்னை பார்த்து.... வெட்கத்தில் முதன் முதலாய் தலை குனிந்தாள்...

சிறிது நேரம் மௌனம்.... "யோசித்துப் பதிலை சொல்லு... ஒன்றும் அவசரம் இல்லை..." என்றான் மெல்லிய குரலில் ஆகாஷ்...

"சரி!" என்ற ஒரே வார்த்தை மட்டும் கூறி அவனுடன் கீழே சென்றாள்.

ஒரு பதினைந்து நிமிடங்களில் ஆகாஷ் மற்றும் அவன் குடும்பத்தினர் கிளம்பினர்.... எல்லோர் முகத்திலும் சந்தோஷ அலை மட்டும் தெரிந்தது மாளவிகாவுக்கு.... அவள் உடனே தன் அறைக்குச் சென்றாள்...

கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள்... இப்பொழுது ஏனோ அது அழகாய் தெரிந்தது..... நிறைய யோசித் தாள்.... அம்மா எனக்கு ஆகாஷைப் பிடித்திருக்கு... என்றாள் தயக்கமின்றி.... இவளை கட்டிக்கொண்டாள் அம்மா... கண்ணில் ஆனந்தக் கண்ணீர்....

இரண்டு மாதங்களில் கல்யாணம் முடிந்தது.... நாள் செல்ல செல்ல மாளவிகாவின் முகம் சந்தோஷத்தில் மிளிர ஆரம்பித்தது..... ஆகாஷ் கூறியது உண்மை என உணர்ந்தாள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிந்துருகும் பிள்ளைப்....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறையில் தடுத்து வைத்திருந்தனர். அதன் போது அவர் மனநலமும் கூடப் பாதிக்கப்பட்டார். ஒரு தாயை தனது பிள்ளைகளை விட்டு எவ்வித குற்றமும் செய்யாத நிலையிலும், சிறையில் தடுத்து வைத்திருந்தனர். அதன் போது அவர் மனநலமும் கூடப் பாதிக்கப்பட்டார் ஒரு அப்பாவித் தாயை பிள்ளைகளை விட்டுப் பிரித்து சிறை வைத்திருந்தமைக் காக மஹிந்தவோ, கோத்தபாயவோ முன்னாள் முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக் ஷவோ எவ்வித கவலையும் கொள்ளவில்லை. அவர்கள் ஒப்புக்கும் கூட வருத்தம் தெரிவிக்கவில்லை.

ஆனால் இளவரசர்களில் ஒருவர் பாரிய குற்றச்சாட்டுக் களின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போது மட்டும் பிள்ளைப்பாசம் பொங்கி எழுகிறது.

ஆண்டுக் கணக்கில் சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் பெற்றோரின், சகோதரங்களின், மனைவியரின் பாசத்தையும் அவர்கள் படும் துயரங்களையும், தவிப்பையும் பொருட்படுத்தாமல் அவர்களின் விடுதலையை தீவிரமாக எதிர்க்கும் இவர்கள் தங்கள் பிள்ளைக்காகத் துடிக்கிறார்கள் என்றால் இவர்களின் மனித உணர்வு எப்படிப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இவர்கள் தனிக்காட்டு ராஜாக்களாக ஆட்சி செய்த காலத்தில் சட்டமும் நீதியும் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. அவர்களின் ஆட்சியை எதிர்ப்பவர்கள், விமர்சனம் செய்பவர்கள் நட்ட நடுவீதியில் வைத்துக் கொல்லப்பட்டனர். காணாமற்போகச் செய்யப்பட்ட னர். கொலை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர். மஞ்சள் உடைக்காடையர்கள் பகிரங்கமாக வன்முறைகளில் ஈடுபட்டனர். நீதிமன்றங்களின் சுயாதீனச் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. பொலிஸாரும், சட்டமா அதிபர் திணைக்களமும் நீதியைத்தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டனர்.

இத்தகைய ஒரு காட்டாட்சியின் இளவரசராக மஹிந்த ராஜபக் ஷவின் புதல்வர்கள் உட்பட ஒரு குழுவே செயற்பட்டது. லஞ்சம், ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் எனச் சகல முறைமீறல்களும் மேலாதிக்கம் வகித்தன. அரசின் ஒவ்வொரு அசைவிலும் இனவாதம் முனைப்புப் பெற்றிருந்தது.

இப்போ ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு சட்டம் மெல்ல மெல்ல தன் வேலையை ஆரம்பித்துள்ளது. யோஷித ராஜபக்ஷ, பசில்ராஜபக்ஷ, கலகொட அத்தஞானசாரதேரர் எனக் கடந்த அரசாங்க காலத்தில் தட்டிக் கேட்க முடியாதவர் களாக, எவரின் உணர்வுகளையும் மதியாது கோரத்தாண்டவம் ஆடியவர்களை நோக்கி இப்போ சட்டம் தன் கரங்களை நீட்டியுள்ளது. அது மட்டுமன்றி இன்றும் பலரையும் நோக்கி விரியத் தயாராயுள்ளது.

எப்படியிருப்பினும் ஏனையவர்களின் பாசத்தையும் துயரத்தையும் துச்சமாக மறுத்தவர்கள். இப்போது பாசத்தில் கருதுகின்றனர். எனினும் இப்போ பிள்ளைப் பாசத்தில் துடிப்பவர்களுக்காக வேறு சிலர் துடிக்கும் நாள்கள் வெகு தொலைவில் இல்லைப் போலவே தெரிகிறது.

# காதலில் ஆரம்பம்.....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிலிருந்தார்.

அந்த நாள்களில் முதலாளி மிகுந்த பொறுப்புடன் நடந்துகொண்டார். முதலாளியின் மனைவி என்னிடமும் வந்து முதலாளி தொடர்பாக கேட்டார்.

நான் முதலாளியை தேடி வீட்டுக்கு வரும் பெண்கள் தொடர்பாக எதுவுமே சொல்லப் போகவில்லை. முதலாளி தொடர்பாக அவரிடம் நல்லவிதமாகத் தான் சொன்னேன். அவர் ஒரு வாரத் துக்குப் பின்னர் மிகுந்த மகிழ்ச்சியுடன் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

அதற்கு பிறகு முதலாளியின் மனைவி எந்த நேரத்திலும் வீட்டுக்கு வரலாம் என்ற அச்சத்தில் முதலாளி மிகுந்த அவதானத்துடன் இருந்தார்.

அதுமட்டுமின்றி, அடிக்கடி வீட்டைச் சுற்றி பொலிஸாரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதை நான் பல நாள் அவதானித்தேன்.

எனினும், ஏன்? எதற்கு? என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இது தொடர் பாக நான் முதலாளியிடமும் சொன்னேன். அதற்கு அவர் என்னையும், சமையல் வேலை செய்யும் அங்கிளையும் கவனமாக வீட்டில் இருக்குமாறு கூறினார்.

இதனிடையே ஒருநாள் இதற்கு முதல் வீட்டிற்கு வராத பெண் ஒருவருடன் முதலாளி வீட்டுக்கு வந்தார். அதன்பின் சிறிது நேரத்தில் முதலாளிக்கும் அந்த பெண்ணுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.


அறைக்குள் இருவரும் தகாத வார்த்தைகளால் ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டார்கள்.. எனக்கும் அங்கிளுக்கும் ஒன்றுமே புரியவில்லை.

முதலாளி அறையிலிருந்து வெளியே வந்து சிறிது நேரத்துக்கு என்னையும் அங்கிளையும் தோட்டத்தில் சென்று இருக்குமாறு கூறினார். எனவே, நாங் கள் இருவரும் தோட்டத்திற்கு சென்று வெகு நேரம் கதைத்துக்கொண்டிருந்தோம்..

அதன்பின் சிறிது நேரத்தில் நாங்கள் இருவரும் மீண்டும் வீட்டுக்குள் சென்றோம். அப்போது எந்தவித சத்தமும் இருக்கவில்லை.

முதலாளியின் அறைக் கதவு மூடப்பட்டிருந்தது. எனவே அந்தப் பெண்ணும் முதலாளியும் நித்திரை கொண்டிருப்பார்கள். என்று நினைத்து நாங்கள் இருவரும் நித்திரைக்குச் சென்றோம்.

மறுநாள் நான் நித்திரையிலிருந்து எழுந்து எனது அறையிலிருந்து



வெளியில் வரும் போது முதலாளி வீட்டிலிருந்து சென்றிருந்தார்.

அவருடைய கார் அங்கிருக்க வில்லை. அதன்பின் சிறிது நேரத்தில் நான் வழமைபோல் முதலாளியின் அறையை சுத்தம் செய்ய சென்றேன். அப்போது அந்த பெண் நித்திரையிலிருந் தார்.

எனவே, நான் அறையை சுத்தம் செய்யாது வந்துவிட்டேன். அதன்பின் சிறிது நேரத்தில் அவர் நித்திரையி லிருந்து எழுந்திருப்பார் என்று நினைத்து தேநீரையும் எடுத்துக்கொண்டு மீண்டும் அறைக்குள் சென்றேன்.

எனினும், அப்போதும் அவர் நித்திரையிலேயே இருந்தார். எனவே, எனக்கு அது சந்தேகத்தை உண்டுபண் ணியது. அவரை எழுப்ப முயற்சித்தேன்.

பலமுறை கூப்பிட்டு பார்த்தேன். அவர் எழுப்பவில்லை. அதன்பின் நான் அவருடைய உடம்பில் கை வைத்து பார்த்தேன். அப்போது உடம்பு குளிர்ச்சியாகவிருந்தது.

> **அன்று நான் செய்யாத குற்றத்துக்காக சிறைக்கு வந்து தண்டனை அனுபவித் தேன். இன்று செய்த குற்றத்துக்காக தண்டனை அனுபவிக்கின்றேன். இது தான் என் தலை விதி.**

நான் அரை மணித்தியாலத்திற்கு மேல் அவரை எழுப்ப முயற்சித்தேன். எனினும் அவர் எழும்பவில்லை. அதன்பின் நான் அறையிலிருந்து வெளியில் வந்து அங்கிளிடம் விடயத் தைக் கூறினேன்.

அதன்பின் அவரும் வந்து பார்த்து விட்டு அவர் இறந்திருக்க வேண்டும். நாங்கள் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிப்போம் என்று கூறினார்.

அதன்படி நாங்கள் மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கினோம். எனினும், துரதிஷ்டவசமாக பொலிஸார் என்னையும் அங்கிளையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தார்கள்.

முதலாளி அதற்குபிறகு எங்கு சென்றார், என்ன ஆனார் என்று ஒன்றுமே தெரியாத நிலையில். அவர் எங்கோ தலைமறைவாகியிருந்தார்.

இந்த நிலையில் அந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப் பட்டது.. அதன் முடிவுகளின்படி அந்த பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கின்றார் என்பது உறுதிசெய்யப்பட்டது..அதன்பின் பொலிஸார் அங்கிளை ஒருவாறுவிடு தலை செய்த போதும் சந்தேகத்தின் பேரில் என்னை பல நாள் விளக்கமறிய லில் வைத்து விசாரணை செய்தார்கள்.

எனினும் அவ்விசாரணைகளின் அடிப்படையில் இக்கொலையுடன் எனக்கு தொடர்பில்லை என்பது உறுதியானது. அதன்பின்னரே என்னை விடுதலை செய்தார்கள்.

ஆயினும், நான் விளக்கமறியலில் இருந்த அந்த நாள்களில் உடல், உளரீதியில் பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளானேன்.

எனவே, முதலாளியை எப்படியாவது கண்டுபிடித்து பழிவாங்க வேண்டும் என்ற ஆத்திரம் எனக்குள் இருந்தது. முதலாளியை அங்குமிங்கும் தேடித் திரிந்தேன். அவரைத் தெரிந்தவர்களிடம் அவரை பற்றி விசாரித்தேன்.

அப்போது தான் முதலாளி ஒரு போதைப்பொருள் வியாபாரி என்பதை நான் அறிந்துகொண் டேன். எனினும், அந்த பாவப்பட்ட பணத்தில் தான் நானும் இத்தனை நாள் வாழ்ந்திருக்கின்றேன். என்பதை நினைக்கும்போது தர்மசங்கடமாகவிருந்தது.

அதன் பின்னர் நான் எந்த தவறான தொழிலிலும் ஈடுபடவில்லை. எனது வாழ்க்கையை கொண்டு நடத்துவதற் காக நேர்மையான முறையில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டேன்.

எனக்கு கஷ்டம் என்று நினைத்து எப்போதுமே மீண்டும் ஊருக்கு செல்ல நினைக்கவில்லை. தனிமையிலேயே என்னுடைய பொழுதுகள் கழிந்தன.

இதனிடையே, ஒருநாள் எதேச்சையாக முதலாளியை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அப்போது நான் ஒரு பழக்கடையில் வேலை செய்துகொண்டிருந்தேன். முதலாளி நான் யார் என்று அடையாளம் காணவில்லை.

எனினும், எனக்கு அவரைக் கண்டவுடன் கொலை செய்யும் அளவுக்கு ஆத்திரம் பீரிட்டு வந்தது. நான் கையிலிருந்த கத்தியை எடுத்து நீ தானே கொலையை செய்துவிட்டு என்னை மாட்டிவிட்டவன் என்று கூறிக்கொண்டே முதலாளியை சரமாரியாக கத்தியால் குத்தினேன்.. முதலாளி துடிதுடித்து நிலத்தில் சாய்ந்தார்.

அவருடைய உயிர் பிரிந்தது. அதன் பின்னரே பொலிஸார் என்னைக் கைது செய்தனர். அன்று நான் செய்யாத குற் றத்துக்காக சிறைக்கு வந்து தண்டனை அனுபவித்தேன். இன்று செய்த குற்றத் துக்காக தண்டனை அனுபவிக்கின் றேன். இது தான் என் தலை விதி.

நன்றி: இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரிட்டிஷ் கவுன்சில்
ஐ.ஈ.எல்.டி.எஸ்
உதவித்தொகை
2015 - 2016


**பின்வரும் நாடுகளில் எந்த ஒரு நாட்டிற்கு விண்ணப்பிக்கும் மூவருக்கு தலா £3,000 மதிப்புள்ள மூன்று கல்வி உதவி தொகைகள் காத்திருக்கிறது**

இங்கிலாந்து | அமெரிக்கா | கனடா | ஆவுஸ்திரேலியா | நியூசிலாந்து

மேலும் விபரங்களுக்கு www.britishcouncil.lk/events இணையத்தளத்தை அணுகுங்கள்.
29 பிப்ரவரி 2016 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

BRITISH COUNCIL IELTS™

IELTS is jointly owned by British Council, IDP: IELTS Australia and Cambridge English Language Assessment.



VISUAL
COMMUNICATION
FASHION
MULTIMEDIA
3D ANIMATION
GRAPHIC DESIGN
FILM MAKING
PHOTOGRAPHY
at
AMDT

100% தொழில்வாய்ப்பு உத்தரவாதம்
அதிகபட்ச நியாய விலையில்

February 13, 14 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்

Talk to us at
011 4381 981
www.amdt.lk

BTEC Approved Centre

AMDT Academy of Multimedia Design & Technology

MERRILL J. FERNANDO
INNOVATION
AWARDS
#ECOVATION
creative solutions for people and planet
dilmahconservation.org

**வளர்ச்சிக்கும் மனிதநேய முகாமைத்துவத்திற்கும் நாட்டில் எதிர்நோக்கப்படும் சூழலியல் சவால்களுக்கும் புத்தாக்கமே அச்சாணியாகும்**

இலங்கை பல்வகை உயிரின வளங்களை மாத்திரமன்றி வரலாற்று மற்றும் கலாசார மரபுகள், அறிவாற்றல் மற்றும் மதிநுட்பம் ஆகியவற்றையும் கொண்ட தேசமாகும். எமது நாட்டின் நிலைபெறு தன்மையான அபிவிருத்திக்கு, படைப்பாற்றல் அர்ப்பணிப்பும் புத்தாக்கத்திறனும் பெரிதும் துணைசெய்யும். தமது கருத்துப்படிவங்களை அல்லது மூல ஆக்கங்களை விருத்தி செய்வதற்கு வசதியற்ற படைப்பாளிகளுக்கு உதவுவதன் மூலம் புதுமையான சிந்தனை கொண்ட சாதாரண இலங்கையரினால் உந்தப்படும் ஓர் இலங்கை வியாபார முயற்சியான Dilmah இன் வெற்றியை தத்தமது துறைகளில் பிரதிபலிக்க அவர்களுக்கு வழிகாட்டுவதே மெரில் ஜே. பெர்னாண்டோ புத்தாக்கத்திறன் விருதின் குறிக்கோளாகும். இந்த விருதுகள், படைப்பாளிகள் தமது கண்டுபிடிப்புக்களைப் பாதுகாத்துப் பணமாக்க உதவும் அதே வேளையில், இலங்கையின் சூழல், மனிதநேயம் மற்றும் பொதுவான அபிவிருத்தியின் முன்னுரிமைகளுக்கும் பக்கபலமாக அமையும்.

கழிவுப்பொருள் முகாமைத்துவம் | நீர் | உயிரின பல்வகைத் தன்மை | சக்திவளம் | பிளு இகானமி

இலங்கையில் சூழல் மற்றும் மனிதநேய அபிவிருத்திக்கு உதவக்கூடிய புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் முன்மாதிரி வடிவமைப்புக்களுக்கே விருது வழங்கப்படும். மொத்தப் பரிசுத் தொகை ரூ.3.5 மில்லியனாகும்.

உங்கள் எண்ணக்கருவை அல்லது முன்மாதிரியைச் சமர்ப்பிக்க, ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்களத்தில் கிடைக்கும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யுங்கள்.
**www.dilmahconservation.org/eco-innovation-award/**

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி**
2016, மார்ச் மாதம் 21ம் திகதி

**வசதியளிக்கும் நடுவர் குழு:**
பேராசிரியர் அஜித் ம அல்விஸ்
பேராசிரியல் சரத் டபிள்யூ. கொட்டகம
கலாநிதி சுமித் பிலப்பிட்டிய
திருமதி ரானி யாரத்ன

Dilmah CONSERVATION

மேலும் விபரங்களிற்கு
Email: awards@dilmahconservation.org
Phone: 077 9614628

MJF Charitable Foundation


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 மாத நிலையான வைப்பிற்கு அதிகூடிய வட்டி சம்பத் வங்கியிடமிருந்து

8.5%

(A.E.R. 8.5%)

உங்கள் சௌகரியம் கருதி
வருடத்தின் 365 நாட்களும் திறந்திருக்கும்
சம்பத் வங்கியின் 12 சுப்பர் கிளைகள் உள்ளிட்ட
நாடெங்கிலுமுள்ள 225 கிளைகள் உங்களுக்கு
சேவை வழங்க காத்திருக்கின்றன.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

facebook.com/Sampathbankplc

Sampath Bank Fitch Ratings A+(lka) | 0112 30 30 50 | www.sampath.lk

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

# இயற்கை அழகினைப் பாதுகாக்க....




HERBAL CARE
HOLLYWOOD STYLE

HESPERUS MARKETING (PVT) LTD.
No. 100, 5th Lane Colombo 03. Tel: 011 2576736/7
E-mail: hesperusm@gmail.com



LG
Life's Good

## தோற்றத்தில் நிஜத்தினைப்போல் காணப்படும் எவையும் தரமானதல்ல, கொள்வனவு செய்வதற்கு முன் தரமானதா என்பதனை அவதானியுங்கள்

நம்பகமான LG வளிச்சீராக்கிகளுக்கான இலங்கையின் ஒரே ஒரு முகவர்
அபான்ஸ் மட்டுமே

- வளிச்சீராக்கி விற்பனையில் 30 வருடத்திற்கு மேலான அனுபவம்
- பொருத்துதல், பராமரிப்பு, சேவை என்பவற்றுடன் தொழிற்சாலையில் பயிற்சிப்பெற்ற பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களால் பழுதுபார்க்கப்படும்
- அபான்ஸ் உத்தரவாதம்
- 3 இலவச சேவைகள்
- இலவசமாக பொருத்துதல்
- நம்பகமான உதிரிப்பாகங்கள்

அபான்ஸானது உற்பத்தியாளர்களிடமிருந்து LG வளிச்சீராக்கிகளை நேரடியாக இறக்குமதி செய்யும் இலங்கையின் ஒரே ஒரு முகவராகும். மேலும் அவ்வளிச்சீராக்கிகள் இலங்கையின் காலநிலைக்கேற்ப திருத்தியமைக்கப்பட்டுள்ளன. தரம் மற்றும் செயல்திறனுக்கான நம்பகமான உத்தரவாதத்துடன் உங்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் பரந்தளவான ஆற்றல் சேமிப்பு LG வளிச்சீராக்கிகளை வழங்குவது அபான்ஸ் மட்டுமே.

### LG நிலை வேக வளிச்சீராக்கிகள்

79,900/- ரூபாவிலிருந்து

- ஸ்பிலிட் வகை • 9000btu–24000btu
- சீலிங் கெசட் • 1800btu–48000btu
- சீலிங் சஸ்பெண்டட் • 48000btu
- சீலிங் கொன்சீல்ட் • 1800btu–93000btu
- ப்ளோர் ஸ்டேன்டிங் • 4800btu–92000btu

### LG இன்வேட்டர் வளிச்சீராக்கிகள்

102,999/- ரூபாவிலிருந்து

INVERTER V Compressor

60%ற்கும் மேலாக ஆற்றல் வெளியீட்டினை குறைப்பதன் மூலமாக இப்புரட்சிகர இன்வேட்டர் தொழில்நுட்பமுடைய LG சாதனங்கள் இரைச்சலற்றதாகவும் அதி செயல்திறன் வாய்ந்ததாகவும் தொழிற்படுகின்றன.

கொரியாவில் தயாரிக்கப்பட்டது

- இன்வேட்டர் ஸ்பிலிட் வகை • 18000btu–24000btu
- இன்வேட்டர் சீலிங் கெசட் • 18000btu–48000btu
- இன்வேட்டர் சீலிங் சஸ்பெண்டட் • 18000btu-48000btu
- இன்வேட்டர் சீலிங் கொன்சீல்ட் (மத்திய நிலை) • 48000btu
- இன்வேட்டர் ப்ளோர் ஸ்டேன்டிங் • 30000btu- 48000btu

ஒற்றை நிலை | மூன்று நிலை

60% ற்கு மேற்பட்ட ஆற்றல் சேமிப்பு
On / Off | Inverter V

**ஆற்றல் சேமிப்பு**

**ஆற்றல் சேமிப்பு** 60% சதவீதத்திற்கும் மேலாக ஆற்றல் வெளியீட்டினை குறைத்து, இப்புரட்சிகர இன்வேட்டர் தொழில்நுட்பமுடைய LG உற்பத்திகள் அதி செயல்திறன் கொண்டதாக காணப்படுகின்றது.

**இன்வேட்டர் அழுத்தி** ஆற்றல் செயல்திறன் முகாமையினூடாக பல்வேறு அளவுகளில் இயங்கும் இயந்திரத்தை நிலையான உபயோகத்திற்கு உட்படுத்துகின்றது.

**சிறந்த நீடித்த தன்மை**

**10 வருடத்திற்கான இன்வேட்டர் அழுத்தி உத்தரவாதம்** அழுத்திக்கான 10 வருட உத்தரவாதத்துடன் வாகனங்களில் காணப்படும் இயந்திர அமைப்பினை போல் LG வளிச்சீராக்கிக்கான அழுத்தியும் காணப்படுகின்றது. கொள்வனவு செய்வோர் LG வளிச்சீராக்கியின் நன்மைகளை நீண்ட காலத்திற்கு அனுபவிக்க இயலும்.

**Gold Fin™** வெப்ப பரிமாற்றியின் மேற்பரப்பினை வயர் மற்றும் வெளிப்பரப்பை சீர்குலைக்க கூடிய கடுமையான சுற்றுச்சூழலின் நீடித்த தாக்கத்திலிருந்து Gold Fin™ பாதுகாக்கின்றது.

**சிதைவு தடுப்பு சாதனம்** கடலோரப்பகுதிகளில் இலகுவாக வெளிப்படும் கடல் காற்றின் மூலமாக ஏற்படும் வெளிப்புற சிதைவினை தடுத்து நீடித்த செயல்திறனை ஏற்படுத்தக்கூடியது

அச்சுவேலி - 0779554229, சங்கானை - 0212250106, சாவகச்சேரி - 0212270005, சுன்னாகம் - 0242240440 / 0772208242, யாழ்ப்பாணம் "A" - 0212220981, யாழ்ப்பாணம் "B" - 0212220242, ... - 0212255259, திருநெல்வேலி - 0212220247

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

HOTLINE 0714020800 | abans.com | us at www.facebook.com/abans
... அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

Abans

ABS GARDNER DIXON HALL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2016 பெப்ரவரி 10ஆம் திகதி வெளியிடப்பட்டது.